# இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி.22:20

சகோ. காலேப் யோசுவா
☎: 044-26490183

2வது குறுக்குத் தெரு, 11.திருமால் நகர்
பூவிருந்தவல்லி,
சென்னை. 600 056

## கொடிய வஞ்சிப்பின் காலத்தில் மந்தையும் அதன் மேய்ப்பனும்

**நான் போன பின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளை போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன். ஆனபடியால், நான் மூன்று வருஷகாலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்தி சொல்லிக்கொண்டு வந்ததை நினைத்து விழித்திருங்கள். அப். 20:29-31.**

1. தேவனுடைய சித்தத்தினாலே, கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடையவதற்காக கர்த்தரால் சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய நான், கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்களுக்கு எழுதுகிறதாவது:
நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. 19.11.2004 அன்று கிறிஸ்துவுக்குள் எனக்கு வயது 26. இன்று கிறிஸ்துவுக்குள் ஒரு ஆரோக்கியமுள்ள, திடகாத்திரமுள்ள இளம் வயதினனாக காணப்படுகிறேன். கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம். 1978 நவம்பரில் கர்த்தர் ஊழியத்தை கொடுத்தார். அன்று முதல் கர்த்தர் என் கரம் பிடித்து வழிநடத்தி வருகிறார். 2004 நவம்பரில் ஒரு புதிய ஆண்டுக்குள் பிரவேசிக்கிறேன். அனுதினமும் வாழ்க்கையில் எவ்வளவோ நிந்தைகள், நெருக்கங்கள், போராட்டங்கள். இவைகள் மத்தியில் ஊழியத்தை தாங்கி; என்னையும், குடும்பத்தினரையும் அனுதினமும் போஷித்து, பராமரித்து, வழிநடத்திவரும் தேவாதி தேவனுக்கு எல்லா துதி கனம் மகிமையுண்டாவதாக. ஆமென். அழைத்தவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்.

2. *சத்துரு நம்மை வஞ்சிக்கும் இந்நாட்கள் போன்று இதுவரை எக்காலத்தும் இருந்ததில்லை. இவை பிசாசின் தந்திரமும் வஞ்சகமும் நிறைந்த நாட்களாம். இந்நாட்களில் கிறிஸ்தவன், முற்காலங்களில் வாழ்ந்த கிறிஸ்தவனைக் காட்டிலும் அதிக கவனமாய் இருக்கவேண்டியது அவசியம். தற்காலத்திலோ, பிசாசின் வஞ்சகம், கிறிஸ்தவரல்லாததோர் தாங்கள் கிறிஸ்தவர்கள் என நம்பும்படி செய்கிறது. பிசாசு தன்னில் முடிந்தவரை தன் வஞ்சகமான கண்ணிகளை வைத்திருக்கிறான். அவன் ஒரு வஞ்சகன். இதுவரை வாழ் நாளில் கண்டிராத மிகவும் வஞ்சகமான நாட்கள் - கூடுமானால் தெரிந்தகொள்ளப்பட்டவர்களும் வஞ்சிக்கப்படத்தக்கதான நாட்களாம் இவை. (சாத்தானின் ஏதேன், பக்கம் -7 கடைசி பத்தி, பக்கம் -8, பத்தி 2-3) பிரியமானவர்களே, இதன் மூலம் நீங்கள் நாம் எப்படிப்பட்டதான ஒரு காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை நிதானித்து கொள்ளலாம். ஆதலால் தான் சபையில் கள்ளகபடமுள்ள வேலையாட்கள், வேற்றுமையான உபதேசங்கள். எங்கும் எதிலும் குழப்பம். இது என்ன? வஞ்சிப்பு. ஆனால் மணவாட்டி வஞ்சிக்கப்படவே மாட்டாள்.*

6. நான் ஒவ்வொரு சபையிலிருந்தும் உதைத்து தள்ளப்பட்டிருக்கிறேன். அவர்கள் என்னை இனி ஒரு போதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அது உங்களுக்கு தெரியும். ஆனால் அங்குள்ள ஏதாவதொரு மனிதன் - நல்ல மனிதன் - என்னை ஏற்றுக்கொள்ளக்கூடும். ஆனால் சபைகள் என்னை ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. ஆனால் அவர் என்னை கரம்பிடித்து வழிநடத்துகிறார் அது உண்மை. அவ்விதமாக அது நடந்தேறும். எனவே அதனால பரவாயில்லை. நான் இயேசுவின் பட்சம். இக்காலத்திற்குரிய செய்தியின் பட்சம் சேர்ந்திருக்க விரும்புகிறேன். இது குறித்து இயேசுவின் பட்சம் சேர்ந்திருத்தல், பத்தி 171ஐ தியானியுங்கள்.

7. ஒரு ஸ்தீரி எவ்வாறு தன் கணவனுக்காக கற்பை காத்துக்கொள்ளவேண்டுமோ, அவ்வாறே சபையும் வார்த்தைக்கு கன்னியாக நிலைத்திருக்க வேண்டும். அது அவளை நம்பி ஒப்புக்கொடுக்கப்பட்ட புனிதமான ஒன்று. சபைக்கு அது நம்பிக்கையாய் ஒப்புவிக்கப்பட்ட ஒன்று. உங்கள் சபை எதை விசுவாசிக்கிறதென்று எனக்கு கவலையில்லை. அது தேவனுடைய வார்த்தைக்கு முரணாயிருக்குமானால் அதிலிருந்து விலகுங்கள். உங்கள் சபைகள் தேவனுடைய வார்த்தைக்கு கன்னியாக இல்லை.

8. இந்தச் செய்தித்தொகுப்பினால் ஏற்கனவே என் மேல் மூர்க்கவெறி கொண்டுள்ள சில பாஸ்டர்கள், இன்னும் அதிகமாக என்மேல் வெறிகொள்வார்கள் என்பதை நன்கு அறிவேன். இன்னும் புதிதாகவும் சிலர் என் மீது விரோதம் கொள்ளலாம். ஆனாலும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய நான் இவைகளை எழுதவேண்டியவனாயிருக்கிறேன். சிலர் என்னிடம் நீங்கள் ஏன் உங்கள் மீது பாஸ்டர்களது வெறுப்பை மேலும் மேலும் கொட்டிக்கொண்டே போகிறீர்கள்? நீங்கள் எழுதுவது சரி தான். ஆனால் அவர்களை உங்களால் திருத்த முடியாது. அவர்களும் திருந்தப்போவது கிடையாது. ஜனங்களும் பாஸ்டர் வணக்கத்தில் மிகவும் பக்திவைராக்கியமாகவே இருக்கிறார்கள். ஆதலால் இப்படிப்பட்ட செய்தித்தொகுப்புகளை எழுதுவதினால் உங்களுக்கும் நேரம் வீண், பணம் வீண். தேவையில்லாத காரியத்தில் ஈடுபட்டுள்ளீர்கள் என்கிறார்கள். ஆனால் நிச்சயமாக ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புஸ்தகத்தில் பெயரெழுதப்பட்டுள்ள ஒருவன், கர்த்தரால் ஐந்து வகை ஊழியத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒருவன் இவ்வாறு புலம்பமாட்டான் என்பது எனது கருத்து. இது சாத்தான் கள்ளகபடமுள்ள வேலையாட்களின் நலன்களை, நன்மைகளைப் பாதுகாக்க, எனக்கு மனமடிவுண்டாக்கப் பேசும் எத்தனமான கிரியை என்பதை நான் நன்கு அறிவேன். சாத்தானுடைய தந்திரங்கள் என்ன எனக்கு தெரியாதா? வேதப்பிரமாணத்தை விட்டு விலகுகிறவர்கள் துன்மார்க்கரைப் புகழுகிறார்கள்; வேதப்பிரமாணத்தை கைக்கொள்ளுகிறவர்களோ அவர்களோடே போராடுகிறார்கள். நீதி.28:6.

9. இக்காலத்திற்குரிய செய்தி இது குறித்து என்ன கூறுகிறது? அண்மையில் அவர்களில் சிலர் என்னிடம் இவ்விதம் பிரசங்கிப்பதை விட்டுவிடுங்கள். அப்படிச் செய்தால், நீங்கள் பெற்றுள்ள நண்பர்களின் நட்பு தன்மையை பாழாக்கி கொள்வீர்கள். அதை விட்டு விலகுங்கள். அவர்கள் செய்வது தவறு என்பது எனக்கு தெரியும். ஆனால் அது நம்முடைய வேலையல்ல என்றனர். அப்படியானால் அது யாருடைய வேலை? அது தவறாயிருக்குமானால் அதை யாராவது சுட்டிக்காட்டவேண்டும். எனவே அதை நாம் தொடர்ந்து செய்வோம். சுபையைக் குறித்து நான் அவ்விதமாகவே உணருகிறேன். (இயேசுவின் பட்சம் சேர்ந்திருத்தல், பத்தி 16.)

10. இயேசு கிறிஸ்துவை சேவிக்கிற எந்த மனிதனுக்கும் இந்த பூமிக்குரிய அநேக நண்பர்கள் இருக்கமாட்டார்கள். உங்களுடைய திட நம்பிக்கையின்மேல் தான் நீ தனித்து நின்றாக வேண்டும். அநேக நேரங்களில் நீ மட்டுமே உன் காரியமாக நிற்கவேண்டியதாயிருக்கும். ஆனால் அவர் உன்னோடு நிற்பார் என்று அவர் வாக்களித்திருக்கிறார். (போய் என் சீஷர்களுக்கு சொல்லுங்கள், பத்தி 66) அல்லேலூயா! கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

11. நம்மிடையே ஏராளமான போலிகள் உண்டு. நம்மிடையே கிறிஸ்தவர்கள் போன்று நடித்துக்காட்டும் மக்கள் உண்டு. ஆனால் அவர்களுடைய ஜீவியங்கள் அதற்கேற்றாற்போல் இல்லாததால் ஏதோ தவறு அவர்களிடம் இருக்கிறது. அவர்கள் கனிகளினால் அவர்களை அறிவீர்கள் என இயேசு கூறினார்...நன்மை, தீமை இன்னதென பகுத்தறிந்து, வேறுபிரித்து வைப்பதற்கு தேவன் நமக்கு உதவிசெய்வாராக. வார்த்தையானது அது எப்பொழுதும் நேராக்குகிறதாயிருக்கிறது. (இடைவெளியில் நிற்றல், பத்தி 74) ஆம், பிரியமானவர்களே இக்காலத்துக்குரிய செய்தியில் இருக்கிறோம் என்று கூறுகிறவர்கள் மத்தியில் போலி ஊழியக்காரர்கள், போலி விசுவாசிகள் ஏராளம் உண்டு. ஒரு ஊழியக்காரனுடைய, விசுவாசியினுடைய வாழ்க்கையை கொண்டு, அவர்கள் ஜீவியத்தைக்கொண்டு, அவர்களுடைய நடத்தையை கொண்டு அவர்கள் யார் என்று நீங்கள் பகுத்தறிந்து கொள்ளலாம். வாழ்க்கை, ஜீவியம் முக்கியத்துவம் கிடையாது, ஆனால் செய்தியை பிரசங்கித்துவந்தால் மட்டும் போதும் என உபதேசிக்கும் பாஸ்டர் ஜான் ஐசக் மற்றும் அவரது உடன் ஊழியக்காரர் சகோ. கே.ராஜாவினுடைய வார்த்தைக்கு செவி கொடுத்து மோசம் போகாதீர்கள். இந்நாட்களில் சபை முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடைக்கிறது என்று உங்களை எச்சரிக்க கடமைப்பட்டிருக்கிறேன். உண்மையான ஊழியக்காரனை, உண்மையான விசுவாசிகளை காணமுடியவில்லை. ஆனால் உண்மையான ஊழியக்காரனும், விசுவாசிகளும் நம் மத்தியில் உண்டு. அப்படியானால் அவர்கள் எங்கே? அவர்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய அந்தக் காணக்கூடாத சரீரத்தில் காணப்படுகிறார்கள். அவர்களை ஆவிக்குரியவர்களே அடையாளம் கண்டுக்கொள்ளமுடியும். அது உண்மை. அல்லேலூயா!

12. இரண்டு ஆவிகள் நெருக்கமாக இருந்து கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கும். நீங்கள் அதை எப்படி அறிந்துகொள்வீர்கள்? வார்த்தை பரிசோதனை அவர்களிடம் கொடுங்கள். வார்த்தையை அவர்களிடம் பேசுங்கள். அவர்கள் வார்த்தையை, இக்காலத்துக்குரிய செய்தியை முற்றிலுமாக விசுவாசிக்கவில்லையென்றால் அவர்களிடம் வித்து இல்லை என்று பொருள். அவர்கள் பிசாசாயிருந்து உங்களை வஞ்சிப்பார்கள். ஆம், பிரியமானவர்களே உங்கள் மத்தியில் அநேக பாஸ்டர்கள் பிசாசாயிருந்து, கள்ளகபடமுள்ள வேலையாட்களாயிருந்து உங்களை வஞ்சித்துக்கொண்டிருப்பதை நீங்கள் அறியாதிருக்கிற தென்ன? இது கொடிய வஞ்சிப்பின் காலம்.

13. மகத்தான சபையாகிய எபேசு சபையில் அப்போஸ்தலரல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலரென்று சொல்லுகிறதை சோதித்து, அவர்களை பொய்யரென்று கண்டறிந்தார்கள். வெளி.2:2. கள்ளப்போதகரான

இமெநேயும், பிலேத்தும் சத்தியத்தை விட்டு விலகி, உயிர்த்தெழுதல் நடந்தாயிற்று என்று சொல்லி சிலருடைய விசுவாசத்தை கவிழ்த்துப் போட்டதை குறித்து சபையை எச்சரித்தார்கள். 2 தீமோ.2:16-18. தேமா இப்பிரபஞ்சத்தின் மேல் ஆசை வைத்து, பின்வாங்கிப்போனான் என்ற எச்சரிப்பு திருஷ்டாந்தமாக நமக்கு எழுதிவைக்கப்பட்டுள்ளது. 2தீமோ.4:10. பொதுவாக சபையானது கள்ளகபடமுள்ள வேலையாட்களால் நிறைந்திருப்பதாலும், இது அனைத்து சபை காலங்களிலும் மிக கொடிய வஞ்சிப்பின் காலமாயிருப்பதாலும், நாம் நம் மத்தியிலுள்ள அநேகர் தங்களை பாஸ்டர்கள் என அழைத்துக்கொண்டு ஊழியத்தின் பேரில் தங்களுக்கு சொத்து சுகங்களை சேர்த்துக்கொண்டு, இம்மைக்குரிய நன்மைகளுக்காக கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்வதை பகுத்தறிந்து, சோதித்தறிந்து, அப்படிப்பட்ட கள்ளகபடமுள்ள வேலையாட்களை, மாறுபாடானவர்களை விட்டு விலகவேண்டும். அவர்கள் பொருளாசையினால் சத்தியத்தை தாறுமாறாக்குவதினால் அவர்களிடம் கிரியை செய்யும் சாத்தானின் வழி நடத்தும் தன்மையை விட்டு நாம் விலக வேண்டும்.

14. ஒருவர் தன்னை போதகர் என்றும், மேய்ப்பர் என்றும், சுவிசேஷகர் என்றும், தீர்க்கதரிசி என்றும், அப்போஸ்தலர் என்றும் பறைசாற்ற வேண்டிய தேவையில்லை. தேவனுடைய வார்த்தை அவர்களை அடையாளம் காட்டுகிறதாயிருக்கிறது. ஏனென்றால் அவர்கள் தேவனால் ஏற்படுத்தப்பட்டவர்கள். தேவனால் ஏற்படுத்தப்பட்டவர்களை மாத்திரமே தேவனுடைய வார்த்தை அடையாளம் காட்டும்.

அ) அதோ அக்கினி ஸ்தம்பம், இதோ மேகஸ்தம்பம் என்று கூறி பல விதமான படங்களை பிரசுரித்து, பல லட்சங்கள் சம்பாதித்த மும்பை தீர்க்கதரிசி, அப்போஸ்தலன், பாஸ்டரை தேவனுடைய வார்த்தை அடையாளம் காட்டவில்லையா?

ஆ) ஊழியத்தின் பேரில் தனக்கு வீடு, சபைக்கென பெரிய கட்டிடம் கட்டி அனைத்தையும் தன் பெயரில் தக்கவைத்துக் கொண்ட பாஸ்டர்களை தேவனுடைய வார்த்தை அடையாளம் காட்டவில்லையா?

இ) ஸ்தீரியின் தலை முக்காடு அவளது சேலை முந்தானையே என்று உபதேசிக்கும் பாஸ்டர்களை தேவனுடைய வார்த்தை அடையாளம் காட்டவில்லையா?

ஈ) ஏழாம் சபை கால தூதனாகிய தீர்க்கதரிசி வில்லியம் மாரியன் பிரன்காம் தான் கர்த்தராகிய பிரன்காம் கிறிஸ்து; கர்த்தராகிய பிரன்காம் கிறிஸ்து, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் புதிய நாமம் என்று உபதேசித்த வேலூர் தூதன் தேவனுடைய வார்த்தை அடையாளம் காட்டவில்லையா?

உ) 1963-ல் கர்த்தருடைய வருகை வந்துவிட்டது, நாம் இந்நாட்களில் ஆயிரம் வருட அரசாட்சியிலிருக்கிறோமென்று பலவிதமான மாறுபாடான உபதேசங்களை, பல்வேறு கோணங்களில் உபதேசிக்கும் புதுக்கோட்டை பாஸ்டர் மற்றும் பட்டாபிராம் பாஸ்டர் போன்றவர்களை தேவனுடைய வார்த்தை அடையாளம் காட்டவில்லையா?

ஊ) நவீன உலகப்பிரகாரமான சபை, ஆவிக்குரிய சபை, இவ்விரண்டும் கர்ப்பந்தரித்து குமாரர்களை பிறப்பிக்க வேண்டும். ஸ்தாபன சபை உலக சபைகளின் ஆலோசனை சங்கத்தை உருவாக்கும்போது, அவளுடைய மகனை, அந்திகிறிஸ்துவை பெற்றெடுப்பாள். மற்றொன்று தேவனுடைய வார்த்தையினால் கர்ப்பந்தரிக்கப்பட்டு சரீரத்தை, இயேசுகிறிஸ்துவின் பூரணப்பட்ட சரீரமாகிய மணவாட்டியை பெற்றெடுக்கும். கிறிஸ்துவின் சரீரம் இன்னும் பூரணமாகவில்லை. அது எத்தனை பேருக்குத் தெரியும்? (மணவாட்டியை தெரிந்துக் கொள்ளுதல், பக்கம் 41, கடைசி பத்தி; பக்கம் 42 முதல் பத்தி. நாள் 29.4.1965) The body of Christ isn't finished yet. How many knows that? (Choosing a bride, page 26, para 4) 1965 வரை கிறிஸ்துவின் சரீரம் பூரணமாகவில்லை. இப்படியிருக்க 1963-ல் தலைக்கல் வந்துவிட்டது, இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வந்துவிட்டது என்பது எப்படி? இந்த துர்உபதேசத்தை கொண்டுவரும் கள்ள அபிஷேகம் பெற்றவர்கள் (false annointed ones) இக்காலத்துக்குரிய செய்தி அடையாளம் காட்டவில்லையா?

எ) கர்த்தருடைய இரகசிய வருகையில் அதாவது எடுத்துக்கொள்ளப்படுதலில் மூன்று கட்டங்கள் உள்ளன. இது குறித்து எடுத்துக்கொள்ளப்படுதல் செய்தியில் பத்திகள் 152-154 வரை வாசியுங்கள்.
முதலாவதாக ஆரவாரம் - மக்களை ஆயத்தப்படுத்த ஓர் செய்தி. இரண்டாவதாக, உயிரோடெழுப்பும் சத்தம் - யோவான் 11:38-44-ல் லாசருவை கல்லறையை விட்டு வெளியே வரும்படி அழைத்த அதே சத்தம். முதலில் செய்தி மணவாட்டியை ஒன்று சேர்க்கிறது. அதன்பின்பு மரித்தோர் உயிரோடெழும்புகின்றனர். பத்தி 152
மூன்றாவதாக எக்காளம். எக்காளம் ஊதப்பட்டு, ஜனங்கள் விருந்துக்கு அழைக்கப்படுகின்றனர். அதுதான் ஆட்டுகுட்டியானவர் மணவாட்டியுடன் ஆகாயத்தில் நடத்தும் விருந்தாகும். பத்தி 153
முதலாவதாக, மணவாட்டியை ஒன்று சேர்க்க அழைக்கும் செய்தி. இரண்டாவதாக முன் காலங்களில் நித்திரையடைந்துள்ள மணவாட்டியை உயிரோடெழுப்புதல். கடைசியாக நிகழ்வது எக்காளம் - ஆகாயத்தில் நடக்கும் விருந்துக்காக உயிரோடெழும்பின மணவாட்டியையும், உயிரோடுள்ள மணவாட்டியையும் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல். பத்தி 154.
செய்தி இப்படியிருக்க, மாறுபாடானவைகளை உபதேசிக்கும் கள்ள அபிஷேகம் பெற்ற (false annointed one) கே. ராஜாவை இக்காலத்துக்குரிய செய்தி அடையாளம் காட்டவில்லையா?

ஏ) திருமணத்தில் ஒரு விசுவாசியையும், ஒரு அவிசுவாசியையும் இணைத்து வைக்கும் சூளை பாஸ்டரை தேவனுடைய வார்த்தை அடையாளம் காட்டவில்லையா?

ஐ) ஒரு விசுவாசி ஒரு அவிசுவாசியை திருமணம் செய்யலாம். நான் அவ்வாறாகவே திருமணம் செய்தேன். இன்று என் வாழ்க்கை நலமாக இருக்கிறது என்ற சாட்சியை பிரசங்கபீடத்தில் அனுமதித்த இயேசு கிறிஸ்துவின் ஜெப வீடு பாஸ்டரை தேவனுடைய வார்த்தை அடையாளம் காட்டவில்லையா?

ஒ) கர்த்தருடைய இராப்போஜன பந்தியை மாலையில் ஆசரிக்கும் பெரவலூர் பாஸ்டரை தேவனுடைய வார்த்தை அடையாளம் காட்டவில்லையா?

ஓ) இரு எஜமானுகளுக்கு ஊழியம் செய்யும் அநேக பாஸ்டர்களை தேவனுடைய வார்த்தை அடையாளம் காட்டவில்லையா?

ஔ) சுவிசேஷகர்கள் எனக் கூறிக்கொண்டு பாஸ்டர்களுக்கு கொத்தடிமைகளாகயிருக்கும் நபர்களை தேவனுடைய வார்த்தை அடையாளம் காட்டவில்லையா?

ஃ) லோக்கல் சபைகளில் விசுவாசி, அவிசுவாசி, பாவனை விசுவாசி கூட்டம் இருக்க, நாம் அனைவரும் மணவாட்டி, மணவாட்டி என மக்களை ஏமாற்றும் பாஸ்டர்களை தேவனுடைய வார்த்தை அடையாளம் காட்டவில்லையா?

க) கர்த்தருடைய நாமத்தை ஆசீர்வதிக்கும் பெரவலூர் பெரியவரை தேவனுடைய வார்த்தை அடையாளம் காட்டவில்லையா?

கா) அமெரிக்கா மக்கள் கலாச்சாரத்தை தேவனுடைய சபைக்குள் நுழைக்கும் சென்னை பாஸ்டரை தேவனுடைய வார்த்தை அடையாளம் காட்டவில்லையா? இவர்கள் யாவரும் தேவனுடைய மனுஷர்கள் அல்ல, மாறாக கள்ளகபடமுள்ள வேலையாட்கள் என்பதை தேவனுடைய வார்த்தையே அடையாளம் காட்டுகிறதே! இதை நீங்கள் இன்றைய வரை அறியாதிருக்கிறதென்ன உங்கள் மனக்கண்கள் திறக்கப்படவில்லையோ?

15. எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல எவனை விழுங்கலாமோவென்று வகைதேடி சுற்றித்திரிகிறான் என்று வேதம் கூறுகிறது. பாருங்கள் கள்ள கபடமுள்ள வேலையாட்கள் தங்களுடைய ஆவியின் ஏவதலைப் பின்பற்றி, கர்த்தர் அழைத்தார், கர்த்தர் ஏற்படுத்தினார் என்று கூறி தங்கள் காரியங்களை நிர்வாகம் பண்ணுகிறார்கள். இவர்கள் மண் சுவரைக் கட்டி, அதற்கு சாரமில்லாத சாந்தைப் பூசி நீங்கள் மணவாட்டி, நாம் மணவாட்டி சபை என்று கூறியே மக்களை மோசம் போக்குகிறார்கள். ஏதேன் தோட்டத்தின் காலத்திலிருந்து தொடங்கி பார்க்கையில், இக்காலத்தைப் போல் கொடிய வஞ்சக காலம் எதுவுமில்லை. (இப்பொல்லாத காலத்தின் தேவன், பத்தி 34, நாள் 1.8.1965) ஆதலால் தான் நான் அவர்கள் செயல்களை கடிந்துக்கொண்டு, புத்தியுள்ள, கற்புள்ள கன்னிகைகளை அவர்கள் நடுவிலிருந்து பிரித்தெடுக்க வேண்டியவனாயிருக்கிறேன். அவர் என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவி கொடுக்கிறது; நான் அவைகளை அறந்திருக்கிறேன் என்கிறார்.

16. இது சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாக கொடிய வஞ்சகத்தை தேவன் அவர்களுக்கு அனுப்பும் காலமாயிருக்கிறது. 2தெச. 2:1, 11-12. லவோதிக்கேயா சபை காலம், அனைத்து சபைக் காலங்களிலும் மிக்க கொடிதான வஞ்சிப்பின் காலம். சத்திய ஆவி உங்களில் வாசம் செய்தால் மட்டுமே நீங்கள் தப்பித்துக் கொள்ள முடியும். மற்றப்படி நீங்கள் வஞ்சிக்கப்படுவீர்கள். சாத்தான் ஏவாளை எவ்வளவு தந்திரமாக வஞ்சித்தான் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

17. மேலும் இது ஆரோக்கியமான உபதேசங்களை பொறுத்துக்கொள்ள மனதில்லாதிருக்கும் காலம். இந்நாட்களில் ஜனங்களுக்கு ஒன்று அவசியமாயுள்ளது. அதாவது அவர்களை அவர்கள் முதுகில் தட்டிக்கொடுத்து அவர்களின் விருப்பப்படியே வாழ்க்கை வாழ அனுமதித்தல் ஆகும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுவிட்டீர்கள், மெய்யான மனந்திரும்புதலாலோ அல்லது நிர்பந்தத்தின்பேரிலோ அல்லது என் கணவர் கூறினார் அதனால் எடுத்தேன் என்பதின் பேரிலோ, எப்படியோ நீங்கள் ஒரு காரணத்தை முன்னிட்டு ஞானஸ்நானம் எடுத்துக்கொண்டீர்கள். நீங்கள் தேவனால் உலகத்தோற்றத்துக்கு முன்பே தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். இனி நீங்கள் அவருடைய மணவாட்டி தான் என்று புகழ்ந்து பேசும் போதகர்கள் தான் அவர்களுக்கு தேவை .

18. கடைசி கால செய்தி என்று கூறிக்கொண்டு யாருக்குப்பின் தான் ஒரு கூட்டம் ஜனங்கள் இல்லை? ஒவ்வொருவரும் ஒரு கூட்டம் ஜனங்களை தங்களுக்கு ஆதாயப்படுத்தி வைத்திருக்கிறார்கள். ஆனால் நிச்சயமாக அந்த கூட்டத்தில மணவாட்டி இருப்பாள் என்று சொல்வதற்கில்லை.

அ) 1963-ல் கர்த்தருடைய வருகை நடந்து விட்டது என்பதன் பேரில் சகோ.எட்வர்ட்க்கு பின் ஒரு கூட்டம். சகோ. ஜெயராஜ்க்கு பின் ஒரு கூட்டம். சகோ.கே.ராஜாவுக்கு பின் ஒரு கூட்டம். மூவருடைய உபதேசங்களும் ஒன்றுக்கொன்று மாறுபட்டது.

ஆ) ஸ்திரீயின் தலை முக்காடு அவள் சேலை முந்தானி என்ற பெயரில் பாஸ்டா ரவீந்திரராஜ் பின் ஒரு கூட்டம். பாஸ்டர் ஜான் சாமுவேல் பின் ஒரு கூட்டம்.

இ) திருமணமுத்தம் என பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் பின் ஒரு கூட்டம்.

ஈ) கர்த்தருடைய இராப்போஜனம் மாலையில் தான் ஆசரிக்கப்படவேண்டும் என்பதன் பேரிலும் பாஸ்டர் ஐசக் வசந்தக்குமாரை சார்ந்து ஒரு கூட்டம்.

உ) கர்த்தருடைய இராப்போஜனமே தேவையில்லை என்பதன் பேரில் பாஸ்டர் ஜெயராஜ்க்கு பின் ஒரு கூட்டம்.

ஊ) சகோ.அந்தோனி ஆத்மா நட்புக்காக வருடத்தில் ஒரு முறையாவது கர்த்தருடைய இராப்போஜனம் எடுத்துக்கொள்வோம் என்பதன் பேரில் சகோ.எட்வர்ட்க்கு பின் ஒரு கூட்டம்.

எ) பெண்கள் சுடிதார் ஆடை அணியக்கூடாது என்பதன் பேரில் பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார், பாஸ்டர் சாமுவேல் பின் ஒரு கூட்டம்.

ஏ) விசுவாசி ஒரு அவிசுவாசியை திருமணம் செய்து கொள்ளலாம் என்பதன் பேரில் பாஸ்டர் ஜான் ஐசக்கை சார்ந்து ஒரு கூட்டம்.

ஐ) பெண்கள் வேலை செய்யலாம் என்ற உபதேசத்தின் கீழ் சில ஊழியர்களுக்கு பின் ஒரு கூட்டம்.

ஒ) சகோ.பிரன்காம் தான் கிறிஸ்து, அவர் கர்த்தராகிய பிரன்காம் கிறிஸ்து என்ற உபதேசத்தின் கீழ் வேலூர் சகோ.தாமஸ்சை சார்ந்து ஒரு கூட்டம்.

ஓ) சகோ. யோசுவா காமாலியேல் தான் ஏழாம் தூதன் என்ற உபதேசத்தின் கீழ் ஒரு கூட்டம்.

ஔ) அது எப்படி? சகோ. தாமஸ் தான் ஏழாம் தூதன் என்ற பறைசாற்றும் மற்றொரு கூட்டம்.

ஃ) நாம் ஆயிர வருட அரசாட்சியிலிருக்கிறோம் எனக் கூறி சகோ.எட்வர்ட் பின் ஒரு கூட்டம். இவ்வாறாக இக்காலத்துக்குரிய செய்தியில் ஆயிரக்கணக்கான உபதேசங்கள், ஆயிரக்கணக்கான கூட்டங்கள். அந்த அளவுக்கு எங்கும் எதிலும் வஞ்சிப்பு. எங்கு திரும்பினாலும் வஞ்சகமே வஞ்சகமே.

19. பிரியமானவர்களே, இப்படியாக இக்காலத்துக்குரிய செய்தியின் பேரில் பாஸ்டர்கள் எனக் கூறிக்கொண்டு கள்ளகபடமுள்ள வேலையாட்கள் சபைக்குள்ளே நுழைந்து சத்தியத்தை தாறுமாறாக்கி வருகிறார்கள். தேவன் தன்னை தம்முடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய பாஸ்டராக நியமித்தார் என்கிறார்கள். ஆனால் அவர்களுக்குள் ஒருமனம் இல்லை. ஒரே உபதேசம் இல்லை. அனைத்து காரியங்களிலும் ஒருவருக்கொருவர் மாறுபட்டிருக்கிறார்கள். அப்படியிருக்க அவர்கள் எப்படி தேவனால் ஏற்படுத்தப்பட்டவர்களாக இருக்கமுடியும்? விசுவாசிகள் மூவகை இருக்கிறார்கள். ஆனால் பாஸ்டர்களில் ஒரே வகைதானே காணப்படவேண்டும்? அவர்களிலும் பல வகை காணப்படுவதால் அவர்களால் அவர்கள் தேவனால் ஏற்படுத்தபடவில்லை என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். ஏனென்றால் தேவன் குழப்பத்தின் தேவன் இல்லை. தம்முடைய ஊழியக்காரர்கள்

மூலம் சபைக்குள் குழப்பத்தை கொண்டுவருவாராகில் சபை பக்திவிருத்தியடையாது. அவரும் குழப்பத்தின் தேவனாகிவிடுவார். எங்கும் எதிலும் குழப்பம். ஆனால் மணவாட்டி தேவனுடைய வார்த்தையில், இக்காலத்துக்குரிய செய்தியில் உறுதியாயிருந்து இந்த கள்ளகபடமுள்ள வேலையாட்களை விட்டு விலகி, தன்னை வேறுபடுத்தி, ஒரு பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை வாழ்ந்து வருகிறவளாயிருப்பாள்.

20. மேலும் மனிதன் தன் சொந்த வழியிலே நடந்து, தன் சொந்த ஆலோசனையின்படியே நடந்து, தேவனுடைய வார்த்தை, கட்டளை கற்பனை பிரமாணங்களை அசைட்டை செய்கிறான். தேவனுடைய வார்த்தையை, இக்காலத்துக்குரிய செய்தியை கேட்க, அதன்படி நடக்க அவனுக்கு பிரியமில்லை. ஞானஸ்நானம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் எடுத்துவிட்டேன், அது போதும் எனக் கூறி அவன் தன் சொந்த வழிகளிலே நடக்க விரும்புகிறான். தேவனுடைய வசனம் தூஷிக்கப்படாதபடிக்கு பாலிய ஸ்திரீகள் தங்கள் வீட்டில் தரித்திருக்கிறவர்களாயிருக்க வேண்டும். தீத் 2:5 அவள் வீட்டில் இருக்கிறவளாய், அடுப்பினருகில் இருக்கிறவளாயிருக்க வேண்டும். சங். 68:12,13 Put the woman back in the kitchen where she belongs, then everything will be alright. But you put her out there in public work, she's gone; I don't say all woman shouldn't sometime have to work; may be they got a sick husband or something, and they have to work. But if they don't have to, they shouldn't do it. Their place is at home, their little castle, that's exactly where they should be.Q & A 73, para 777 & 771 ஆனால் உங்கள் ஊழியக்காரர்களை பாருங்கள், விசுவாசிகளை பாருங்கள், நன்கு திடகாத்திரமான, நல்ல சரீர கட்டோடு கொழுகொழு என்றிருக்கிறார்கள். அவர்கள் மனைவிகள் பொது இடங்களில் சென்று வேலை செய்கிறார்கள். இது என்ன? அவர்களுடைய கிரியைகள் அவர்கள் யாரென்பதைக் காட்டுகிறது. தேவனுடைய வார்த்தை அவர்கள் யாரென்று அவர்களை அடையாளம் காட்டுகிறது. பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் அவர்களின் மனைவி வேலை செய்வதால் அவர் யாரென்று அவருடைய கிரியைகள் அவரை அடையாளம் காட்டுகிறது. ஆம், மனிதர்கள் அவர்கள் சொந்த வழிகளிலே நடக்க விரும்புகிறார்கள். அவர்களது கிரியைகள், அவர்கள் யாரென்று அடையாளம் காட்டும்போது நீ எப்படி அவர்களோடு இசைந்து, இணைந்து செல்ல முடியும்? நீ இசைந்து செல்லுகிறாய், ஏனென்றால் உனக்குள்ளும் அதே ஆவி தான் கிரியை செய்கிறது.

21. தேவனுடைய வார்த்தைக்கு யேசபேல் செவி கொடுக்க மறுத்தாள். குற்றம் கண்டுபிடிக்கும் அந்த வயதோதிபனாகிய எலியாவை தன் போதகன் என்று சொல்லிக்கொள்ள அவள் விரும்பவில்லை. எப்படியாயினும் அவன் அவளுடைய போதகன் தான். அது உண்மை! ஏனென்றால் தேவன் அவனை அனுப்பினார். அவன் தன் செய்தியை முழங்கினான். அவன் செய்தியை பிரசங்கித்து, பாவம் என்று அழைக்கப்படும் அனைத்தையும் கண்டித்தான். அந்த நவீன யேசபேல் தன் மந்திரவாத சக்தியினால் ஜனங்களை மயக்கினாள். இன்று அநேக பாஸ்டர்கள் தங்கள் நயவசனிப்பினால், தாழ்மையினால், தந்திரத்தினால் மக்களை மயக்குவதைப்போன்று ஆகும். எலியாவின் செய்தி அவிசுவாசமுள்ள சந்ததியை ஆக்கினைக்குட்படுத்தியது. அவ்வண்ணமாகவே உங்கள் பாஸ்டரையும் உங்களையும் ஆக்கினைக்குட்படுத்துவதை அவர்களும் நீங்களும் இன்னும் அறியாதிருக்கிறதென்ன?

22. ஒரு பெண் சபையில் பிரவேசிக்கும்பொழுது தலையின் மேல் கைகுட்டை போட்டுக்கொள்ளவேண்டும், அல்லது தன் சேலை முந்தாணியினால் தன் தலையை மூடிகொள்ளவேண்டும் என்று வேதத்தில் எங்குள்ளது? அதை குறித்து தேவனுடைய வார்த்தையை எனக்கு காண்பியுங்கள் பார்க்கலாம். அது கள்ள தீர்க்கதரிசனம். அது கள்ள போதகம். நமது மத்தியில் உங்கள் பாஸ்டர் ஜான் சாமுவேல் மற்றும் பாஸ்டர் ரவீந்திரராஜ் போன்றவர்களின் இந்த உபதேசம் கள்ள உபதேசமே. நீங்கள் தலையில் தொப்பி அணிந்து கொள்ளும்போது, அல்லது தலையை சேலை முந்தாணியினால் மூடிகொள்ளும்போது, நீங்கள் கிறிஸ்துவை கனவீனப்படுத்துகிறீர்கள். அது உண்மை. ஸ்திரீகளே, உங்களுக்கொரு முக்காடு உள்ளது. அது ஒரு தொப்பி அல்ல. அது ஒரு கைகுட்டை அல்ல. அது உங்கள் சேலை முந்தாணி அல்ல. மாறாக உங்கள் நீண்ட தலைமயிர் தான் உங்களுக்கு முக்காடு. அது வேதாகமம் அது தேவனுடைய வார்த்தையாயுள்ளது.

23. இந்த ஸ்தரீகள் இன்றைக்கு - அல்லது ஸ்திரீகளாகிய நீங்கள், தொப்பிகளை அணிகிறீர்கள் எனக்கு தெரியும். (நமது பெண்கள் தங்கள் சேலை முந்தானையால் தங்கள் தலையை மூடிகொள்ளுகிறார்கள். சுடிதார் ஆடை அணிகிறவர்கள் தங்கள் சால்வையினால் மூடிகொள்ளுகிறார்கள்) இது உங்களுடைய முக்காடு என்று கூறுகிறீர்கள். அது தவறு. வேதாகமம் ஒரு ஸ்தீரியினுடைய முக்காடு அவளது தலை மயிரே என்று கூறுகிறது... ஆகவே இப்பொழுது, ஸ்தீரிகள் நீண்ட தலைமயிரை கொண்டிருக்க வேண்டியவர்களாயிருக்கின்றனர். அதைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ அது ஒரு பொருட்டல்ல. அது கர்த்தர் உரைக்கிறார் என்பதாகும்.

24. இதை குறித்து உங்களுடைய மேற்கூறிய இரு பாஸ்டர்களையும், அவர்களைச் சார்ந்த ஜனங்களையும் நான் எச்சரிக்கவில்லையென்றால், இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனாயிருக்க நான் தகுதியற்றவன். கிறிஸ்துவின் ஊழியக்காரன் வேதாகமத்தின் நோக்கத்திற்காக பயமில்லாதவனாயிருக்கவேண்டும். இது குறித்து நீங்கள் செய்திகள் நாம் ஏன் ஒரு ஸ்தாபனம் அல்ல? நாள் 27.9.1958, பத்தி 125-129 மற்றும் கே.ப 18 பத்தி 127ஐ தியானியுங்கள்.

25. பாஸ்டர் ஜான் சாமுவேலும், பாஸ்டர் ரவீந்திரராஜ் திருந்துவார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? அவர்கள் திருந்தவே மாட்டார்கள். கோணலானதை நேராக்க கூடாதென்று பிரசங்கி கூறுகிறான். காகத்தை நீங்கள் புறாவாக மாற்ற முடியாது. காகம், காகம்தான். புறா, புறாதான். ஆம், இவர்கள் குருடர்களுக்கு வழி காட்டும் குருடர்களாயிருக்கிறார்கள். கர்த்தாவே இவர்கள் மீது கிருபையாயிரும்.

26. சகோ.பிரன்காமே, ஏன் இப்படி கூச்சலிட்டுக்கொண்டேயிருக்கிறீர்கள்? நீங்கள் உங்கள் செய்தியை வேறு விதமாக பிரசங்கித்தால் ஜனங்கள் உங்களை விரும்புவார்கள் என்கின்றனர். எனக்கு கவலையில்லை. ஜனங்கள் என்ன நினைக்கின்றார்கள் என்பதை குறித்து எனக்கு கவலையுண்டு. என்னை தவறாக புரிந்துகொள்ளவேண்டாம். ஆனால் என் சிரத்தை அனைத்தும் தேவன் என்ன நினைக்கிறார் என்பதன் பேரிலே உள்ளது. ஆம் பிரியமானவர்களே இதுவே ஒரு உண்மையான ஊழியக்காரனின் பாதை. தேவனுடைய உண்மையான ஊழியக்காரன் ஒவ்வொருவரும் தேவனுடைய வார்த்தைக்கு உண்மையாயிருக்கவே விரும்புவான். நீங்கள் அவ்வாறே அதற்கு உண்மையாயிருக்கவேண்டும். நீங்கள் உண்மையாயிராவிட்டால், அதற்கு எதிராக ஒரு சத்தம்

எங்கோ கூச்சலிட்டுக்கொண்டிருக்கும். ஆனால் யோனாவின் செய்தி அக்காலத்திலிருந்தவர்களை
தடுத்து நிறுத்தியது என்றா நினைக்கிறீர்கள்? இல்லை, ஐயா! அப்படியானால் அதுவே இன்றைய நிலையும்.
உங்களுடைய பாஸ்டர்களும் அவர்களை சார்ந்தவர்களும் செவிகொடுக்க போவதில்லை. ஆனால் தேவனுடைய
வித்து செவிகொடுக்கும். இது குறித்து அவருடைய வருகையின் அடையாளமாக பிரகாசிக்கும் சிகப்பு விளக்கு.
நாள் 23.6.1963 பத்தி 138-147 வரை தியானியுங்கள்.

27. தேவன் தம்முடைய இரட்சிப்பின் திட்டத்தை நிறைவேற்ற முதலாவது தமது சபையை மீட்க மாம்சத்தில்
வெளிப்பட்டு, நமது மத்தியில் ஐந்து வகை ஊழியங்களை செய்தார். அதாவது தமது சரீரமாகிய சபையை
மீட்க தாமே ஐந்து வகை ஊழியங்களை செய்தார்.
அ) இயேசு கிறிஸ்து ஒரு அப்போஸ்தலனாக பணி செய்தார். எபி.3:1 அதாவது இயேசு ஒரு அப்போஸ்தலன்.
ஆ) நசரேயனாகிய இயேசு தேவனுக்கு முன்பாகவும் ஜனங்கள் எல்லாருக்கு முன்பாகவும் செய்கையிலும்,
வாக்கிலும் வல்லமையுள்ள தீர்க்கதரிசியாயிருந்தார். யோ.4:19. லூக் 24:19 இயேசு ஒரு தீர்க்கதரிசி.
இ) இயேசு கலிலேயாவிலே வந்து, தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தை பிரசங்கித்து: காலம்
நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார்.
மாற்.1:14,15. தாம் வாழ்ந்த ஊராகிய நாசரேத்துக்கு அவர் வந்து, தம்முடைய வழக்கத்தின்படியே ஓய்வு நாளில்
ஜெப ஆலயத்திலே பிரவேசித்து, வாசிக்க எழுந்து நின்றார். அப்பொழுது ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகம்
அவரிடத்தில் கொடுக்கப்பட்டது. அவர் புஸ்தகத்தை பிரித்தபொழுது... தரித்திரருக்கு சுவிசேஷத்தை
பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார்... என்று எழுதியிருக்கிற இடத்தை அவர் கண்டு, .. உங்கள்
காதுகள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றையத்தினம் நிறைவேறிற்று என்றார். லூக்.4:16-21 இங்கு இயேசு
கிறிஸ்து ஒரு சுவிசேஷகனுடைய பணியை செய்தார்.
ஈ) இயேசு: நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காக தன் ஜீவனை கொடுக்கிறான் என்றார்.
யோ.10:11. இவர் ஆடுகளுடைய பெரிய மேய்ப்பன். எபி.13:20 இவர் மேய்ப்பர்களுக்கு பிரதான மேய்ப்பன்.1பேதுரு
5:4. ஆம், இயேசு ஒரு பாஸ்டர் பணியை செய்தார்.
உ) கிறிஸ்து ஒருவரே உங்களுக்கு போதகராயிருக்கிறார்; நீங்கள் எல்லாரும் சகோதரர்களாயிருக்கிறீர்கள்
மத்.23:8 யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு எனப்பட்ட பரிசேயன் இராக்காலத்திலே இயேசுவினிடத்தில்
வந்து: ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம் என்றான். யோ.3:2. ஆக இயேசு
கிறிஸ்து ஒரு போதகனாகவும் தன் பணியை செய்ததை காண்கிறோம்.

28. ஆக இயேசு கிறிஸ்து தாமே மேற்கூறிய ஐந்து வகை ஊழியங்களையும் தம்முடைய சரீரமாகிய
சபையை மீட்க வந்தபொழுதுசெய்தார். இப்பொழுது இரண்டாவதாக, சபை காலங்களில் தமது சரீரமாகிய
சபையில் தமது ஆவியை ஊற்றி, மேற்கூறிய ஐந்து வகை ஊழியங்களையும் வைத்து, தாம் தமது சபையை
பெற்றுக்கொள்ளவரும்போது அதை கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் மகிமையுள்ள சபையாக
தமக்கு முன் நிற்க செய்கிறார். அவருக்கு இரத்தத்தால் கழுவப்பட்ட ஒரு கூட்ட ஜனங்கள் தேவை. அவருக்கு
கறைதிரையற்ற ஒரு சபை தேவை. ஆனால் நீங்கள் மணவாட்டி சபை மணவாட்டி சபையென்று கூறும் உங்கள்
சபைகளை பாருங்கள். அது பேய்களுடைய குடியிருப்பும் சகலவித அசுத்த ஆவிகளுடைய காவல் வீடும்,
அசுத்தமும் அருவருப்புமுள்ள சகல வித பறவைகளுடைய கூடுமாயிருக்கிறது. சில சகோதரர்கள் என்னிடம்
வந்து சகோதரனே ஒரு ஆவிக்குரிய சபையை, ஒரு உண்மையும் உத்தமுமான தேவனுடைய மனுஷனை
பாஸ்டராக கொண்ட ஒரு ஆவிக்குரிய சபையை உங்களால் எங்களுக்கு அடையாளம் காட்டமுடியுமா என்று
பல முறை கேட்டனர். அவர்களுக்கு நான் இங்கு செல்லுங்கள், அந்த சபை உங்களை நித்தியத்துக்கு வழி
நடத்தும் என்று கூற முடியவேயில்லை. அனைத்து சபைகளும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளாகத் தான்
இருக்கிறது. ஆதலால் தான் பிரியமானவர்களே, நீங்கள் வாருங்கள், கிறிஸ்துவின் காணக்கூடாத அவருடைய
சரீரமாகிய சபையில் வந்து அவயவமாகுங்கள் என்று உங்களை அழைக்கிறேன். ஆனால் அதற்கு
செவிகொடுப்பார் இல்லை. கிறிஸ்துவின் காணக்கூடாத சரீரமாகிய சபையில் தான் தேவன் கறைதிரையற்ற ஒரு
சபை உருவாக்கப்படுவதை காண வாஞ்சிக்கிறவர். அதற்காக உண்மையும், உத்தமுமான
இருதயமுடையவர்களே ஐந்து வகை ஊழியத்தில் ஏற்படுத்துகிறார். இவர்கள் வெள்ளாடுகளை வழிநடத்த
அல்ல. மாறாக செம்மறி ஆடுகளை வழிநடத்த ஏற்படுத்தப்பட்டவர்கள்.

29. இப்பொழுது நாம் பரிசுத்த ஆவியை குறித்தும் அந்த காரியங்கள் அனைத்தை குறித்தும் பிரசங்கித்தால்,
நான் எப்படிப்பட்ட சபைக்கு அதை பிரசங்கிப்பேன்? ஏன், எனக்கு காலி இருக்கைகள் மட்டுமேயிருக்கும். என்
மெத்தடிஸ்ட் ஜனங்கள் வெளியே நடந்து சென்றுவிடுவார்கள். என் பாப்டிஸ்ட் ஜனங்களும், என்
பிரஸ்பிட்டேரியன்களும் கூட எனலாம். அவர்கள் வெளியே நடந்து செல்லட்டும் அவர்கள் துவக்கத்திலே
வெள்ளாடுகள். உங்களுக்கு வேண்டியது செம்மறியாடுகளே. பாருங்கள், பாருங்கள்? நீங்கள் வெள்ளாடுகளுக்கு
மேய்ப்பனாக இல்லை. நீங்கள் செம்மறியாடுகளுக்கே மேய்ப்பனாயிருக்கிறீர்கள். கே.ப 113, பத்தி 231.

30. நான் மலிவு பிஸ்கோத்துகள் தின்று ஓடைதண்ணீர் குடிக்க நேரிட்டாலும் சுவிசேஷத்தை பிரசங்கித்து
சத்தியத்தையே கூறுவேன். என் சபையோர் அனைவரும் எழுந்து வெளியே நடந்தாலும், நான் அப்பொழுதும்
அவர்களுக்கு சத்தியத்தையே எடுத்துரைப்பேன். ஆம், நிச்சயமாக. (நாம் ஏன் ஒரு ஸ்தாபனம் அல்ல, பத்தி
105) ஆம் பிரியமானவர்களே இது தான் ஒரு உண்மையான, உத்தமமான ஊழியக்காரனுக்கு அடையாளம்.
இந்த அடையாளத்தை உடையவர்தானா உங்கள் மேய்ப்பன்? உங்கள் மேய்ப்பன் ஒரு விசுவாசிக்கும் ஒரு
அவிசுவாசிக்கும் திருமணம் செய்து வைக்கிறார். உங்கள் மேய்ப்பன் தன் மகனை, மகளைஒரு அவிசுவாசிக்கு
திருமணம் செய்து வைக்கிறார். அதாவது உங்கள் மேய்ப்பன் தன் மகனை, மகளை, அதாவது செம்மறியாட்டை
ஒரு அவிசுவாசிக்கு, வெள்ளாட்டுக்கு திருமணம் செய்து வைக்கிறார். தசமபாகம் காணிக்கை அதிகமாக
கொடுப்பவர்களுக்கு சபையில் அதிகமான தனி மரியாதை. குறைவாய் கொடுப்பவர்களை ஏறிட்டு பார்ப்பதில்லை.
இதெல்லாம் உங்கள் சபையில் நடக்கும் வெட்கக்கேடுகள் தானே! உங்கள் பாஸ்டர் யாரென்பதை நீங்கள்
அடையாளம் கண்டுகொள்ளவில்லையா? அப்படியானால் நீங்களும் குருடர்களே!

31. இயேசு கிறிஸ்து அப்போஸ்தலன், தீர்க்கதரிசி, சுவிசேஷகன், மேய்ப்பன். போதகனுடைய ஊழியத்தை
செய்ததோடு மட்டுமல்ல, சபையில் டீக்கன், தர்மகர்த்தா பணியை கூட செய்தார். இயேசு கப்பர்நகூமில்
வந்தபோது, வரிப்பணம் வாங்குகிறவர்கள் பேதுருவினிடத்தில் வந்து: உங்கள் போதகர் வரிப்பணம்

செலுத்துகிறதில்லையா? என்று கேட்டார்கள். பேதுரு செலுத்துகிறார் என்றான். இயேசு பேதுருவினிடத்தில் நீ கடலுக்க போய் தூண்டில் போட்டு, முதலாவது அகப்படுகிற மீனைப் பிடித்து, அதன் வாயை திறந்து பார். ஒரு வெள்ளிப் பணத்தை காண்பாய். அதை எடுத்து எனக்காகவும் உனக்காகவும் வரிப்பணமாக கொடு என்றார். மத்.17:24-27. பாருங்கள் இயேசு ஒரு தர்மகர்த்தாவாக செயல்பட்டார்.

32. இயேசு சபையில் ஒரு டீக்கனுடைய பணியையும் செய்தார். இயேசு தேவாலயத்தில் பிரவேசித்து, ஆலயத்தில் விற்கிறவர்களையும், கொள்ளுகிறவர்களையும் துரத்திவிட்டு, காசுக்காரர்களுடைய பலகைகளையும், புறா விற்கிறவர்களுடைய ஆசனங்களையும் கவிழ்த்து, ஒருவனும் தேவாலயத்தில் வழியாக யாதொரு பண்டத்தையும் கொண்டுபோகவிடாமல், என்னுடைய வீடு எல்லா ஜனங்களுக்கும் ஜெப வீடு எனப்படும் என்று எழுதியிருக்கவில்லையா? நீங்களோ அதை கள்ளக்குகையாக்கினீர்கள் என்று அவர்களுக்கு சொல்லி உபதேசித்தார். மாற்.11:15-17. இவ்வாறாக இயேசு தேவாலயத்தில் ஒரு டீக்கனுடைய பணியை செய்து சபையில் ஒழுங்குமுறைகளை நிலைநாட்டினார்.

33. கிறிஸ்து மூன்று முறை வருகிறார். முதலாவதாக தமது சபையை மீட்க வந்தார். இரண்டாவதாக தமது சபையை பெற்றுக்கொள்ள வருகிறார். அதாவது எடுத்துக்கொள்ளப்படுதல். சபையை எடுத்துக்கொள்ளவரும்போது அது கறைதிரையற்ற சபையாக காணப்பட, அதில் ஐந்து வகை ஊழியங்களை வைத்து வழிநடத்துகிறார். மூன்றவதாக ஆயிரம் வருட அரசாட்சிக்கு தமது மணவாட்டியுடன், அதாவது சபையுடன் வருகிறார். இதை நீங்கள் கே.ப 9-ல் 104வது பத்தியில் காணலாம். கர்த்தருடைய இரண்டாம் வருகையில் இரண்டு பாகங்கள் உண்டு. முதலாம் பாகம் இரகசிய வருகை. அதாவது எடுத்துக்கொள்ளப்படுதல். இரண்டாம் பாகம் பகிரங்கமான வருகை என்பது பிசாசின் உபதேசம். இந்த உபதேசத்திற்கு தேவனுடைய வார்த்தையிலும், இக்காலத்துக்குரிய செய்தியிலும் எங்கும் ஆதாரங்கள் கிடையாது. இதற்கு சகோ.ராஜா மற்றும் அவரது கூட்டாளி சகோ.ஜான் ஐசக் ஆகிய இருவரிடம் மட்டுமே ஆதாரங்கள் உண்டு. இவர்களுடைய ஆதாரங்கள் லௌகிக ஞானத்தைக்கொண்டது, பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறது.

34. அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியருக்கு எழுதின நிருபத்தில் எபேசு சபையில் கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்களுக்கு கிழ்க்கண்டவாறு எழுதுகிறான்.
மேலும் நாமனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவினுடைய சரீரமாகிய சபையானது பக்திவிருத்தியடைவதற்காகவும் அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரை தீர்க்கதரிசிகளாகவும், சிலரை சுவிசேஷகர்களாகவும், சிலரை மேய்ப்பர்களாகவும் போதகர்களாகவும் ஏற்படுத்தினார். எபே.4:11-14.

35. இதை நாம் ஆங்கிலத்தில் கீழ்க்கண்டவாறு வாசிக்கிறோம்.
And **he gave** some, Apostles; and some, Prophets; and some, Evangelists; and some, Pastors and Teachers; **for** the perfecting of the Saints for the work of the Ministry for the edifying of the body of Christ, **till** we all come in the unity of the faith, and of the knowledge of the Son of God, unto a perfect man, unto the measure of the stature of the fullness of Christ.

36. இங்கு நன்கு கவனியுங்கள். கர்த்தர் இந்த ஐந்து வகை ஊழியங்களை யாருக்காக ஏற்படுத்தினார்? கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்களுக்கு. பவுல் இவர்களுடன் தன்னையும் இணைத்துக் கொண்டு நாமனைவரும் (we all) என்று கூறுகிறான். இங்கு நாம் கிறிஸ்து, தம்முடைய சரீரமாகிய சபையில் குறிப்பிட்ட காலங்கள் வரை, குறிப்பிட்ட காரணங்களுக்காக, ஐந்து வகை ஊழியங்களை ஏற்படுத்தியிருப்பதை காண்கிறோம். இந்த ஐந்து வகை ஊழியங்களையும் கர்த்தரே ஏற்படுத்துகிறார். தேவனுடைய சரீரமாகிய சபைக்கு இந்த ஐந்து வகை ஊழியங்களை நியமிக்க இந்த பூமியில் யாருக்கும் அதிகாரம் கிடையாது. கர்த்தரே ஒருவனை இந்த ஊழியங்களுக்கு ஏற்படுத்தமுடியும். கர்த்தரே தாம் ஏற்படுத்திய அந்த ஊழியத்திலிருந்து ஒருவனை நீக்கவும் முடியும். He is both the appointing and terminating, dismissing authority . No man, church or organisation could ever ordain ministers in the fivefold ministry.

37. ஆனால் நாம், நம் மத்தியில் தங்களை பாஸ்டர் என அழைத்துக்கொள்ளும் சகோ.P.M.A. சாமி, சகோ. பால் சங்கரன், சகோ. சாமுவேல் தங்கமணி போன்றவர்கள் சபையில் சிலரை பாஸ்டராகவும் சிலரை சுவிசேஷகர்களாகவும் நியமித்து, அவர்களை பிரதிஷ்டை செய்து வைத்ததை கண்டிருக்கிறோம். நாம் ஆவிக்குரியவர்களானால் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்க வேண்டும் 1கொரி.2:15. இப்படிப்பட்ட நியமங்கள் யாவும் பிசாசின் கிரியைகள். இவ்வாறாக நியமிக்கப்பட்டவர்களும், நியமித்தவர்களும் தேவனால் ஏற்படுத்தப்பட்டவர்கள் அல்ல. மாறாக இவர்கள் தேவசித்தத்திற்கு புறம்பாக அவருக்கென்று ஊழியம் செய்து வருகிறவர்கள் என்பதை மனதில் பதியவைத்துக்கொள்ளவேண்டும். ஏனென்றால் அவர்களுடைய கிரியைகளில் அவர்கள் யாரென்பதை வெளிப்படுத்துகின்றனர். மேற்கூறிய பாஸ்டர்கள் தங்கள் அழைப்பையும், ஸ்தானத்தையும் அறியவில்லை. ஏனென்றால் அவர்கள் தேவனால் ஏற்படுத்தப்பட்டவர்களல்ல. அவர்கள் தேவனால் ஏற்படுத்தப்பட்டவர்களாயிருப்பாராகில் தங்கள் அழைப்பையும், ஸ்தானத்தையும் அறிந்தவர்களாகவும், உணர்ந்தவர்களாகவும், தங்கள் வரம்புகளுக்குட்பட்டு செயல்படும் ஊழியக்காரர்களாகவும் இருப்பார்கள். தேவனுடைய வார்த்தையும் இவர்கள் தேவனால் ஏற்படுத்தப்பட்டவர்கள் என்பதை அடையாளம் காட்டும். இவர்கள் தங்கள் வரம்புகளுக்கு மீறி செயல்பட்டு வந்ததால் இவர்கள் தேவனால் ஏற்படுத்தப்பட்டவர்களல்ல என்பதையும் ஆணித்தரமாக உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

38. எனக்கு நன்கு அறிமுகமான ஒரு சகோதரர் உண்டு. இந்த சம்பவம் பல ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது. அப்பொழுதே நான் அவரை எச்சரித்தேன். ஒரு நாள் அவர் என்னிடம் வந்து சகோதரனே, ஓரிரு தெரு பிரசங்கம் செய்தேன், என்னுடைய பாஸ்டர் அதை பார்த்து, எனது இயற்கையான சாமர்த்தியத்தைப் பாராட்டி, என்னை சபையில் சுவிசேஷகனாக நியமித்தார் என பெருமையாக கூறினார். நான் அவரிடம் அவரது ஊழியம் சபை பக்திவிருத்திக்கான ஊழியமாக எனக்கு தெரியவில்லை. மேலும் ஒரு பாஸ்டர் ஒருவனை சுவிசேஷகனாக

ஏற்படுத்த முடியாது. ஆதலால் உங்கள் அழைப்பைக் குறித்தும், நீங்கள் சுவிசேஷகனாக பிரகடனம் செய்யப்பட்டதை குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள் என கடிந்து கொண்டேன்.

39. பின் ஒரு நாள், இப்பொழுது அவர் தனது சபையில், சபை பக்திவிருத்திக்காக செய்திகளை கொடுப்பதாகவும், ஆதலால் தான் தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஊழியக்காரன் தான் என்று பெருமைபாராட்டினார். நான் ஐந்து வகை ஊழியம் என்பது ஒரு லோக்கல் சபைக்கு மட்டுமல்ல, அது காணக்கூடாத சரீரமாகிய கிறிஸ்துவின் சபைக்கு, உலகம் முழுவதும் பரவியுள்ள அந்த காணக்கூடாத சரீரத்திலுள்ள ஊழியம் என்று எச்சரித்தேன். அவர் என் எச்சரிப்பை உதாசினப்படுத்தியே வந்தார். ஆனாலும் நாங்கள் ஒருவரையொருவர் நேசித்தோம், நேசிக்கிறோம். இவர் தன்னைத்தானே வஞ்சித்துக் கொண்டிருந்தார். இன்னும் வஞ்சித்துக்கொண்டிருக்கிறார். இந்த சகோதரனைப் போன்று தங்களை தாங்களே சுவிசேஷகர்கள் என்ற அழைத்துக்கொண்டு அவர்கள் சார்ந்திருக்கும் சபை அவர்களை சுவிசேஷகர்களாக பிரகடனம் செய்துள்ளது என்று கூறிக்கொண்டு பல்லாவரம், பொழிச்சலூர் பகுதிகளில் பலர் தங்களை வஞ்சித்துக்கொண்டிருக்கிறார்கள். கடைசிக்கால செய்தியில் இருக்கிறோம் என்று கூறிக்கொண்டு அனைத்து தாறுமாறுகளுக்கும், தில்லுமுல்லுகளுக்கும் பிறப்பிடமாக பல்லாவரம், பொழிச்சலூர் பகுதியிருப்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள் என கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன். ஒரு லோக்கல் சபைக்குட்பட்டிருந்து, அதன் பாஸ்டருக்குட்பட்டிருந்து, அவர்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அதன் பக்திவிருத்திக்கு கர்த்தர் அவர்களை சுவிசேஷகர்களாக ஏற்படுத்தினார் என்பதை ஏற்றுக்கொள்ள முடியவே முடியாது.

40. ஐந்து வகை ஊழியம் குறித்து இக்காலத்துக்குரிய செய்தி என்ன கூறுகிறது?
ஆனால் ஐந்து உத்தியோகங்கள் உள்ளன. முதலாவதாக அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், போதகர், சுவிசேஷகர், மேய்ப்பர் (எபே.4:13). இவை தேவனால் நியமிக்கப்பட்ட உத்தியோகங்கள். மனிதர் இந்த உத்தியோகங்களை வகிக்கின்றனர். அவர்களால் முடியாது. அவைகளை நீங்கள் விரும்பி பெறமுடியாது. அவைகளுக்காக நீங்கள் ஜெபம் பண்ண முடியாது. அவை இராஜாதிபத்தியமாக அளிக்கப்படுகின்றன. நீங்கள் அந்த உத்தியோகத்தை கொண்டவர்களாகவே பிறக்கின்றீர்கள். யாராவதொருவர், ஒருவர் மேல் கை வைத்து அவனை தீர்க்கதரிசியாக்கினதினால் அவன் தீர்க்கதரிசி அல்ல. ஒரு தீர்க்கதரிசி தன் தாயின் கர்ப்பத்திலிருந்தே தீர்க்கதரிசியாக பிறக்கிறான். எனவே அவன் எப்பொழுதுமே தீர்க்கதரிசியாயிருக்கிறான். கர்த்தர் எரேமியாவிடம், நான் உன்னை தாயின் வயிற்றில் உருவாக்குமுன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னை பரிசுத்தம் பண்ணி, உன்னை ஜாதிகளுக்கு தீர்க்கதரிசியாக கட்டளையிட்டேன் என்றார். (எரே.1:5) பாருங்கள்! மோசே ஒரு குழந்தையாக பிறப்பதற்கு முன்னே கர்த்தருடைய தீர்க்கதரிசியாக இருந்தான். மற்றவர்களும் கூட. ஏதேன் தோட்டம் முதற்கொண்டே கிறிஸ்து தேவனுடைய குமாரனாயிருந்தார். அது உண்மை (கிருபையின் செய்தி, பத்தி 192-194, நாள் 27.8.1961).

41. ஆக ஐந்து வகை ஊழியமானது தேவனால் முன் அறிந்து, முன் நியமிக்கப்பட்டதாகும். ஒவ்வொரு ஊழியமும் அதனதன் அழைப்பில் தனித்தன்மை வாய்ந்தது. ஆனாலும் ஒன்றில்லாமல் மற்றவைகள் பூரணமாகமுடியாது. கிறிஸ்துவின் சரீரமாகிய சபை ஐந்து வகை ஊழியம் இல்லாமல் பூரணமாக முடியாது. சபை மேய்ப்பன் / பாஸ்டர் ஊழியத்தை மட்டும் கொண்டு பூரணமாக முடியாது. The ministry of five fold is foreknown and fore ordained of God. Each fold of the ministry stands alone in its calling but complementary to the others as a whole. பாஸ்டர்தான் ஆல் இன் ஆல் என கூறிக்கொண்டு சிலர் சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகை செய்வதை குறித்து எச்சரிக்கையாயிருங்கள். அவர்கள் உங்களை வஞ்சிக்கிறார்கள்.

42. தேவன் ஒரு மனிதனை ஒரு பணியை செய்வதற்கென்று அழைப்பாராகில், அவர் அந்தப் பணிக்கென்று அவனை முற்றிலுமாக தகுதிபடுத்தி, அந்த பணிக்கான தேவைகளை அவனுக்கு கொடுத்து, அவனை ஏற்படுத்துகிறார். கர்த்தர் ஒரு மனிதனை பிரசங்கிக்க அனுப்புவராகில் அவனை அதற்கு தகுதிப்படுத்தி, அவன் பணிக்கு தேவையானவைகளை கொடுத்து அனுப்புகிறார். பிரசங்கிப்பது: தேவனுடைய வார்த்தை பிரசங்கிப்பது மற்றும் உபதேசம். **Preaching**: Preaching the Word of God and Doctrine. தேவனுடைய வார்த்தையை பிரசங்கிப்பதற்கான, உபதேசங்கள் கொடுப்பதற்கான தேவனுடைய ஆவியை அருளுகிறார். பாருங்கள், ஆதி அப்போஸ்தலர்கள் பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே ஜனங்களுக்கு சுவிசேஷத்தை பிரசங்கித்தார்கள். 1பேதுரு.1:12. பிரசங்கிப்பவன் உபதேசங்களை கொண்டு வருவதால், அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் உபதேசங்களில் போதிக்கப்பட்டிருந்தனர்.,

43. ஒருவன் போதிக்க அழைக்கப்பட்டிருந்தால் போதிப்பதற்கான அனைத்து தகுதிகளையும் பெற்றிருப்பான். பாருங்கள் போதிப்பதில் (Teaching) ஆலோசனை கொடுத்தல், புத்தி கூறுதல் (Counselling); வழிகாட்டுதல் (Guiding); தைரியப்படுத்துதல், உற்சாகப்படுத்துதல் (Encouraging) உதவிசெய்தல் ( Helping) நம்பச்செய்தல், நம்பிக்கையை கொண்டுவருதல் (Convincing) போஷித்தல், பேணுதல், காத்துக்கொள்ளுதல் (Nursing) போன்றவைகள் அடங்கியுள்ளது. இந்த பண்புடையவனாக ஒரு போதகனை கர்த்தர் முற்றிலும் தகுதிப்படுத்தி அனுப்புகிறார்.

44. ஒரு தீர்க்கதரிசிக்கு தரிசனங்களை காணக்கூடிய கண்களை கொடுக்கிறார். தரிசனம், சொப்பனங்கள் மூலமாக அவனோடு இடைப்படுகிறார். தீர்க்கதரிசியாகிய மோசேயை பார்வோனிடம் அனுப்ப, அவர் அவனை வனாந்திரத்தில் 40 ஆண்டுகள் பயிற்சி கொடுத்தார். அவர் யாரையும் அரைகுறையாக தகுதிப்படுத்தி அனுப்புவதில்லை. பாஸ்டர் ஜான் ஐசக் அவர்களே, நீங்கள் இங்கு நன்கு கவனியுங்கள். சகோ.காலேப் யோசுவா ஒன்றை வந்து பிரசங்கித்ததில் உணர்ச்சி வசப்பட்டு இதுதான் சத்தியம் என்றீர்கள். பின் சகோ.ராஜா வந்து பிரசங்கித்ததில் அவர் கூறியது தான் உண்மை என்றீர்கள். நேற்றைய காரியமும், இன்றைய காரியமும் இப்படியிருக்க, நாளை எந்த உபதேசத்தை பிரகடனம் செய்வீர்களோ? அன்பு சகோதரனே உங்களுடைய அழைப்பை சீர்தூக்கி பாருங்கள். இதை உங்கள் நன்மைகாகவே எழுதுகிறேன்.

45. இந்த ஊழியங்கள் வேதவாக்கியங்களை ஆதாரமாக கொண்டுள்ளதால், ஊழியங்களின் தகுதிகள் வேதவாக்கியங்களுக்கும், அதன் சட்டதிட்டங்களுக்கும் உட்பட்டதாக இருக்கவேண்டும். All these offices are set

according to the scriptures and they must have the scriptural rules of what they must do. (A total deliverance, para 28)

46. நீலகிரி மாவட்டத்தில் சில பாஸ்டர்களை நான் அறிவேன். பொதுவாக அவர்களுக்கு இக்காலத்துக்குரிய செய்தியைப் பற்றி ஒன்றுமே தெரியாது. ஆனாலும் இக்காலத்துக்குரிய செய்தியை பிரசங்கிக்கிறோம், கர்த்தர் பாஸ்டராக ஏற்படுத்தியுள்ளார் என்று தங்களை பிரகடனம் செய்துகொள்ளுகிறார்கள். இக்காலத்துக்குரிய செய்தியில் இருக்கிறோம் என்று கூறும் சபைகளில் பெண்கள் பிரசங்கிக்க அனுமதிக்கப்பட்டார்கள். இராப்போஜனம் பகலில் ஆசரிக்கப்பட்டது. கால்கள் கழுவும் சடங்காச்சாரம் இராப்போஜனத்துக்கு முன்பே ஆசரிக்கப்பட்டது. இப்படியாக அநேக காரியங்களை இக்காலத்துக்குரிய செய்திற்கு முரணாகவே செய்து வந்தார்கள். அவ்வப்பொழுது பல இடங்களிலிருந்து ஊழியர்கள் அங்கு சென்று, அவர்களுடைய தவறுகளை திருத்தினார்கள். காரியம் இப்படியிருக்க, கர்த்தர் தம்முடைய சபை பக்திவிருத்தியடைய தவறான போதனைகளில், உபதேசங்களில் சபையை வழிநடத்துகிறவர்களை எவ்வாறு பாஸ்டராக ஏற்படுத்த முடியும்? முடியாது! அவர்கள் தங்களை தாங்களே பாஸ்டராக நியமித்துக்கொண்டார்கள்.

47. இக்காலத்துக்குரிய செய்தியில் ஊழியம் செய்கிறோம், கர்த்தர் எங்களை பாஸ்டராக நியமித்துள்ளார் என்று கூறும் அநேகர் இன்று கூட அரை வேக்காடாகத்தான் இருக்கிறார்கள். நிச்சயமாக அவர்கள் தேவனால் ஏற்படுத்தப்பட்டவர்கள் அல்ல. இந்த அரைகுறை வேக்காடுகள், ஆப் பாயில் தேவனுடைய சபையை பூரணத்துக்குள் வழிநடத்த முடியாது.

48. When God sends a man to do anything, he comepletely equips him with everything that he has need of. If God calls a man to be a preacher, he puts something in him to preach with. If He calls him to be a teacher, He put something in him to teach with. If He calls him to be a prophet, He puts him to see visions and to be a prophet. God always completely equip this man. And that's just what he done when He sent Moses into Egypt. He raised him in a certain way, and He schooled him in a certain way and He moulded him and made him and fashioned him. (A total deliverance, para 48.) See, God does not make halfway preachers. He makes him complete.

49. ஒரு தீர்க்கதரிசி ஒரு சுவிசேஷகன் அல்ல. ஒரு சுவிசேஷகன் ஒரு தீர்க்கதரிசி அல்ல. மேய்ப்பன் ஒரு சுவிசேஷகன் அல்ல. அவ்வண்ணமாகவே சுவிசேஷகன் ஒரு மேய்ப்பன் அல்ல. ஐந்து வகை ஊழியங்களில் கர்த்தர் ஒவ்வொருவருக்கும் ஒரு உத்தியோகத்தை கொடுத்திருக்கிறார். ஒருவருக்கு இரு உத்தியோகங்கள் கிடையாது. இரு உத்தியோகங்களை ஒன்றுக்கொன்று கலக்ககூடாது. அப்படியானால் தன்னைத்தான் அப்போஸ்தலன், தீர்க்கதரிசி, மேய்ப்பன், சுவிசேஷகன் என்று அழைத்துக்கொண்ட மும்பை பிரசங்கியார் யார்? தேவனுடைய வார்த்தை உங்களுக்கு அவரை அடையாளம் காட்டியது. ஆனால் நீங்களோ அவரை அடையாளம் கண்டுகொள்ளவில்லை.

50. பல்லாவரம், பொழிச்சலூரர் பகுதிகளில் அநேகர் தங்களை சுவிசேஷகர்கள் என்று அழைத்துகொள்ளுகிறார்கள். ஆனால் இவர்கள் ஒரு பாஸ்டருக்கு அடிமையாக இருந்து, அவரிடம் ஊழியத்திற்கான உத்தரவுகளை பெற்று, வெளியே செல்வதும், வருவதும் அவருக்கு கணக்கு ஒப்புவிப்பதுமாக இருந்து வருகிறார்கள். இப்படிப்பட்ட நவீன சுவிசேஷகர்கள் குறிப்பாக சென்னை சபையிலும், கல்வாரி சபையிலும் அதிகம் உண்டு. ஒரு சுவிசேஷகனை வழிநடத்த ஒரு பாஸ்டரா? இப்படிப்பட்ட சுவிசேஷகர்கள் ஊழிய அழைப்பே பெறாத, கர்த்தரால் ஏற்படுத்தப்படாத, தங்களை தாங்களே சுவிசேஷகர்கள் ஆக்கிகொண்டு, தேவசித்தத்திற்கு புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்கிறார்கள். இப்படிப்பட்ட சுவிசேஷகர்களை குறித்து எச்சரிக்கையாயிருங்கள். இவர்களும் உங்களை சத்தியத்துக்குள் வழிநடத்த முடியாது. I don't believe that any Pastor could pastor an Evangelist, that is a Pastor cannot pastor an Evangelist or any other ministry in the five fold. பிரியமானவர்களே, நான் உங்களை நேசிப்பதால் இதை எழுதுகிறேன். சகோதரனே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள். இவைகளை செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை. 2பேதுரு.1:10.

51. பிரத்தியேகமான ஒரு ஊழியத்துக்கு அழைக்கப்பட்ட ஒரு நபர், தனக்கு கீழ் உள்ள பதவிகளை, ஒரு குறிப்பிட்ட காலம் வரை செய்யலாம். ஆனால் அந்த நபர் தனக்கு மேலுள்ள பதவிகளை செய்யமுடியாது. முதலாவது அப்போஸ்தலன், இரண்டாவது தீர்க்கதரிசி, மூன்றாவது சுவிசேஷகன், நான்காவது மேய்ப்பன் / பாஸ்டர், ஐந்தாவது போதகன். பாருங்கள் ஒரு மேய்ப்பன் ஒரு போதகனுடைய பணியை ஒரு குறிப்பிட்ட காலம் வரை செய்யலாம். ஆனால் பாஸ்டர், சுவிசேஷகனுடைய பணியைசெய்ய முடியாது. அவ்வண்ணமாகவே ஒரு சுவிசேஷகன் ஒரு மேய்ப்பனுடைய, ஒரு போதகனுடைய பணியை செய்யலாம். ஆனால் அவன் ஒரு தீர்க்கதரிசியின் பணியை செய்யமுடியாது, ஏனென்றால் சுவிசேஷகன் தனக்கு மேலுள்ள பதவிக்கு அழைக்கப்படவில்லை. A man with a gift of a certain ministry could also do the work of another ministry which is lower in position than his but never one which is higher. ஒரு அப்போஸ்தலன் தனக்கு கீழ் உள்ள இதர நான்கு ஊழியங்களையும் செய்யலாம். Apostles, they embrassed the other ministries lower than theirs that is, they did also the work of the prophet. Evangelist, pastor and preacher where gifted ministries were yet to be put.

52. An Evangelist could do the work of a pastor and teacher, but he could not be an apostle or a prophet, for he is not called and ordained of God any higher than evangelist. In the same way a pastor can do the only work of a teacher and not any other higher position namely evangelist, prophet and apostle. காரியம் இப்படியிருக்க நமது சென்னையிலுள்ள சபைகளின் பாஸ்டர்கள் சுவிசேஷகர்களை அடக்கி ஆளுகை செய்வதை காண்கிறேன். ஒரு பாஸ்டர், ஒரு சுவிசேஷகனிடம் நீ எங்கு சென்றாலும் என்னிடம் கூறித்தான் செல்லவேண்டும் என்கிறார். பாஸ்டருக்கு அடிமைப்பட்டிருக்கும் சுவிசேஷகன், தன் அழைப்பை அறியாதவன். முதலில் அவன் அழைக்கப்படவேயில்லை. அந்த பாஸ்டரும் தன் அழைப்பை அறியவில்லை அவரும் முதலில் அழைக்கப்படவேயில்லை. இதெல்லாம், தங்களை தாங்களே பாஸ்டராக, சுவிசேஷகர்களாக நியமித்துக்கொண்ட

கேஸ்கள். ஆதலால் தங்கள் ஸ்தானங்களை இவர்களால் அறிந்து கொள்ள முடியவில்லை இந்த நாகரிகத்தை நான் சென்னை சபையில் கண்டேன். அங்கு ஒரு சுவிசேஷகன் பாஸ்டரின் கரங்களுக்குள் அடங்கியிருக்கவேண்டும் என்ற உபதேசத்தை என்னிடம் கொண்டுவந்தார்கள்.

53. அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள் பல இடங்களுக்கு பிரயாணம் செய்து, நற்செய்தியை, இக்காலத்துக்குரிய செய்தியை பிரசங்கித்து, ஸ்தாபன சபைகளிலுள்ள வித்துக்களை வெளியே அழைத்து, சபைகளை ஸ்தாபிக்கிறார்கள். இந்தப் பணியை பாஸ்டர்கள் செய்யக்கூடாது. இது அவர்களுடைய பணி அல்ல. ஆனால் இந்நாட்களில் நம் மத்தியில் நம்முடைய பாஸ்டர்கள் தான் இந்தப் பணியை செய்து வருகிறார்கள். இவர்களில் பிரதானமானவர் சென்னை சபை பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் அவர்கள். இவர்கள் தேவனால் நியமிக்கப்படாதவராதலால் தேவ சித்தத்திற்கு புறம்பாக அவருக்கென்று ஊழியம் செய்கிறார்கள். கள்ள கபடமுள்ள வேலையாட்கள் தங்கள் சுய ஆதாயத்துக்காக ஊழியம் செய்கிறார்கள். இதை ஆவிக்குரியவர்கள் தான் அறிந்து கொள்ள முடியும், புரிந்து கொள்ள முடியும். ஆக அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள் ஒரு இடத்தில் சபையை உருவாக்கி அதை வழிநடத்துகிறார்கள். ஆனால் அதை நீண்ட காலமாக செய்யமுடியாது. கர்த்தர் தம்மால் முன் குறிக்கப்பட்ட மேய்ப்பனை அந்த சபையில் உருவாக்கும் வரை, அந்த சபையில் மேய்ப்பன் பணியை செய்கிறார்கள். மூப்பர்களை ஏற்படுத்தி சபையை வழிநடத்துகிறார்கள்.

54. Apostles, prophets and evangelists, they travelled from one place to another to preach the end time message and the message of the hour, establishing local assemblies of saints with the revelation of the hidden truth which they received from the messenger of the seventh church age. They could not stay and pastor a local assembly for long. So they do the pastoral work until God would raise His ordained shepherds (pastors ) whom He had foreknew before the foundation of the world.

55. மேலும் ஐந்து வகை ஊழியம் ஒரு குறிப்பிட்ட லோக்கல் சபைக்கு உட்பட்டது அல்ல. உதாரணமாக இந்த ஊழியங்கள் ஏல்பெத்தேல் சபைக்கு மட்டும் உட்பட்டது அல்ல. ஏல்பெத்தேல் சபையில் இந்த ஐந்து வகை ஊழியங்கள் காணப்படவேண்டும் என நிர்பந்தம் இல்லை. இந்த ஊழியங்கள் உலகம் முழுவதும் வியாபித்திருக்கும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு ( Mystical Body) உட்பட்டது. Ministers in the five fold ministry are not at all restricted to any local assembly or church or a prayer house or an organisation etc. இந்த ஐந்து வகை ஊழியத்தில் ஒருவன் தேவனால் ஏற்படுத்தப்பட்டவனாயிருப்பதினால், அவன் அதிலிருந்து விலகவே முடியாது. When God called a person to a particular ministry in the five fold ministry, he can never get away from that call.

56. இந்நாட்களில் நாம் நமது மத்தியில் அடிக்கடி நிகழ காண்பது என்ன? ஒருவன் ஒரு லோக்கல் சபையில் விசுவாசியாக அல்லது டீக்கனாக அல்லது மூப்பராக இருக்கிறான். சபை பாஸ்டருக்கும் இவருக்கும் சில உபதேசங்களின் அடிப்படையில் கருத்துவேறுபாடு உண்டாகிறது. இதனால் இவர்களுக்கிடையேயுள்ள உறவுகள் பாதிக்கப்படுகிறது. அநேக சம்பவங்களில் சபைக்கு வரும் தசமபாகம், காணிக்கைகளை பார்த்துப் பார்த்து, அனைத்தையும் பாஸ்டரே தன் தொந்தியில் போட்டுக்கொள்ளுகிறாரே; அன்று தனக்கு நல்ல பங்களா ஒன்று கட்டினார், இன்று தனக்கு சபை கட்டிடம் என்ற பெயரில் ஒரு நல்ல கட்டிடத்தை கட்டிக்கொண்டார். நான் அன்று முதல் இன்று வரை ஏழையாகத்தானே இருக்கிறேன், நானும் பாஸ்டரானால் அவ்வப்பொழுது நிறைய சம்பாதிக்கலாமே என்ற வயிற்றெரிச்சல் உண்டாகிறது. சபையில் தசமபாகம் காணிக்கை வரவுசெலவு விஷயத்தில் தகராறு உண்டுபண்ணுகின்றனர். தனக்கு சாதகமாக சிலரை அழைத்துக்கொண்டு, வெளியேறி, ஒரு சபையை ஆரம்பித்து, தன்னை பாஸ்டராக பிரகடனம் செய்து கொள்ளுகிறார். அல்லது மற்றொரு பாஸ்டரை கொண்டு தன்னை பாஸ்டராக பிரகடனம் செய்துகொள்ளுகிறார். இவ்வாறாக ஒருவனை பாஸ்டராக பிரகடனம் செய்துவைப்பதில் பாஸ்டர் தங்கமணி போன்றவர்களுக்கு நிகர் அவரே. ஒரு மனிதனை பாஸ்டராக நியமிக்கும் மற்றொரு பாஸ்டர். இதெல்லாம் வெட்கக்கேடு. இவ்வண்ணமாகவே பிரகடனம் செய்துவைத்து மாதத்திற்கு ஒரு முறை கர்த்தருடைய இராப்போஜனத்துக்காக சென்று, அங்கு தசமபாகம் காணிக்கைகளை பெற்றுக்கொள்ளுகின்றனர்.

57. பாருங்கள் அரசியலில் என்ன நடந்து கொண்டிருக்கிறது? ஒவ்வொருவனும் தன்தன் சுய பிழைப்புக்காக அனுதினமும் ஒரு கட்சிகளிலிருந்து மற்றொரு கட்சிக்கு தாவுகிறான். அல்லது புதிய கட்சி ஒன்றை ஆரம்பிக்கிறான். இதே காரியம் தான் இக்காலச் செய்தியிலும் நடைபெறுகிறது. அரசியலிலும் தனிப்பட்ட மனிதர்களுடைய ஆதிக்கம். இங்கும் பாஸ்டர்களுடைய ஆதிக்கம். அரசியலிலும் மக்களே ஏமாளிகள். இக்காலத்துக்குரிய செய்தியிலுள்ள சபைகளிலும் மக்களே ஏமாளிகள்.

58. நம் மத்தியில் அநேகர் தங்களை சுவிசேஷகர்கள், பாஸ்டர்கள் என்று அழைத்துக்கொண்டு நாங்கள் கிறிஸ்துவை அறியாத மக்கள் மத்தியில் சென்று ஊழியம் செய்யப்போகிறோம், மலைகளுக்கும் காடுகளுக்கும் சென்று அங்கு பழங்குடி மக்கள் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்க செல்லுகிறோம், விக்கிரக ஆராதனைக்காரர்கள் மத்தியில் ஊழியம் செய்ய போகிறோம் என்று கூறி ஊழியம் செய்யப்போகிறார்கள். இதென்ன? இவர்கள் தங்கள் ஊழிய அழைப்பையே அறியவில்லை. ஏனென்றால் இவர்கள் தேவனால் ஏற்படுத்தப்பட்டவர்கள் அல்ல. பாருங்கள், மேற்கூறியவர்கள் மத்தியில் ஊழியம் செய்ய, அவர்கள் மத்தியில் கிறிஸ்துவைப் பற்றி கூறி, சுவிசேஷத்தை கூறி, அவர்களை கிறிஸ்துவினிடத்தில வழிநடத்த, கிறிஸ்து மீது விசுவாசத்தை கொண்டு வர கர்த்தர் சகோ. மோகன் சி. லூசரஸ், சகோ.டி.ஜி.எஸ். தினகரன் போன்றவர்களை வைத்திருக்கிறார். ஆனால் ஐந்து வகை ஊழியம் கிறிஸ்துவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்கள் பூரணப்பட ஏற்படுத்தப்பட்ட ஊழியங்களாகும். இப்பொழுது இரு ஊழியங்களுக்குமுள்ள வித்தியாசத்தை நீங்கள் புரிந்துகொண்டீர்களா? மேலும் ஐந்து வகை ஊழியத்தில் பாஸ்டராக இருக்கிறேன் என்று ஒருவர் கூறிக்கொண்டு தெருதெருவாக . ஊர்ஊராக, காடு காடாக, நாடு நாடாக கிறிஸ்துவைப் பற்றி குறை சொல்லுகிறேன் என்று கூறுவாராகில் அவர் முற்றிலுமாக தேவசித்தத்திற்கு புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்கிறார். நிச்சயமாக அவர் தன் ஸ்தானத்தை அறியவில்லை. ஏனென்றால் அவர் தேவனால் அழைக்கப்படவில்லை,

ஏற்படுத்தப்படவில்லை. கர்த்தர் அவனுக்கு ஒரு மந்தையை கொடுத்திருபாரானால், அவன் எக்காரணத்தைக்கொண்டும், அந்த மந்தையை விட்டு வெளியே செல்லக்கூடாது. ஒரு மேய்ப்பனுக்கு ஒரு மந்தைதான். அநேக மந்தைகள் கிடையாது. கொடுக்கப்பட்ட அந்த மந்தையை விட்டு அவர் வேறு எங்கும் செல்லக்கூடாது. அந்த மந்தையையே அவர் கண்காணித்து கொள்ளவேண்டும் அது ஒன்றே அவருடைய கடமை. ஊழியத்தினிமித்தம் எங்கும் அவர் ஊர் சுற்றவேண்டிய தேவையில்லை. அது அவருடைய ஊழியமும் அல்ல. கர்த்தர் அதற்க இதர ஊழியங்களை ஏற்படுத்தி வைத்திருக்கிறார்.

59. கர்த்தர் மேற்கூறிய ஐந்து வகை ஊழியங்களையும் எதற்காக ஏற்படுத்தினார்?
அ) முதலாவதாக கிறிஸ்துவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு. இது For the perfecting of saints என ஆங்கிலத்தில் கூறப்பட்டுள்ளது. சீர்பொருந்தும் பொருட்டு என்பதற்கு ஆங்கிலத்தில் perfecting என்ற வார்த்தை உபயோகிக்கப்பட்டுள்ளது. இதற்கு பரிசுத்தவான்கள் பூரணராகும் பொருட்டு என்று பொருளாகும். அதாவது கிறிஸ்துவுக்குள்ளான பரிசுத்தவான்கள் பூரணப்படும்பொருட்டு. பாருங்கள் இந்த ஊழியம் ஒரு விக்கிரகாரதனைக்காரனை இயேசுவினிடத்தில் வழிநடத்த அல்ல. மலைவாழ் மக்களை கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்தல்ல. நரிகுறவர் மக்களை கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தில் கொண்டுவரல்ல. மாறாக இந்த ஊழியம் கிறிஸ்துவுக்குள்ளான பரிசுத்தவான்களை பூரணப்படுத்தும்பொருட்டு ஏற்படுத்தப்பட்டது. கிறிஸ்துவுக்குள்ளான பரிசுத்தவான்கள் ஏன் பூரணப்படவேண்டும்? பரலோகத்திலிருக்கிற நம்முடைய பிதா பூரணசற்குணராயிருக்கிறது போல, நாமும் அதாவது அவருடைய மணவாட்டியும் பூரணசற்குணராயிருப்பதற்காகும். Perfect, even as our Father, who is in heaven is perfect. மத். 5:48. நாம் சபைக்கு ஒருவருக்கொருவர் ஐக்கியம் கொள்ள வருகிறோம். ஆனால் பூரணப்படுதல் நமக்கும் தேவனுக்குமிடையேயுள்ள ஒன்று. கிறிஸ்துவின் இரத்தமே நமமை பரிசுத்த ஆவியினால் பரிபூரணப்படுத்துகிறது. பரிபூரணப்படுத்துதல் கிறிஸ்துவுக்கே உரியது.
ஆ) இரண்டாவது சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காக. இதை ஆங்கிலத்தில் நாம் For the work of the ministry என வாசிக்கிறோம். அதாவது ஊழியத்தின் வேலைக்காக. ஆதாவது இயேசு கிறிஸ்துவினுடைய ஊழியத்திற்காக. For the ministry of Jesus Christ. சபை காலங்களில் கிறிஸ்துவின் ஊழியம் மணவாட்டியின் ஊழியம். இயேசு கிறிஸ்து செய்த அதே ஐந்து வகையான ஊழியத்தை மணவாட்டி செய்ய. அதாவது அவர் தமது மணவாட்டியை பெற்றுக்கொள்ள வரும்போது, அதை கறைதிரைமுதலானவைகள் ஒன்றுமில்லாமல் அதை மகிமையுள்ள சபையாக அவருக்கு முன் நிறுத்த.
இ) மூன்றாவதாக கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைவதற்காக. இதை ஆங்கிலத்தில; For the edifying of the body of Christ என வாசிக்கிறோம். அதாவது கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை கட்டுவதற்காக. For the building it up. அதாவது சபை கிறிஸ்துவை அறிகிற அறிவில் வளர்ந்து ஒரு கட்டிடமாக எழும்ப. அதாவது விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்கி, சபை ஒரு கூர்நுனி கோபுரமாக எழும்பி, சபை எடுத்துக்கொள்ளப்படுதலுக்காக ஆயத்தப்படுத்த, தகுதிப்படுத்த, 2பேதுரு1:5-8. அதன்பின் தலைக்கல்லாகிய கிறிஸ்து வந்து அமர்ந்து, சபை எடுத்துக்கொள்ளப்படும்.

60. இதுவரை இந்த ஐந்த வகை ஊழியத்தை ஏற்படுத்தியது யார்? இந்த ஐந்து வகை ஊழியம் எதற்காக ஏற்படுத்தப்பட்டது? என்று பார்த்தோம். இனி இந்த ஊழியம் எது வரை என்று பார்ப்போம். அதாவது இந்த ஊழியத்தின் காலக்கட்டம் எதுவரை என்று பார்ப்போம்.
அ) கிறிஸ்துவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்கள் தேவகுமாரனைப் பற்றும் விசுவாசத்தில் ஒருமைப்பட்டவர்களாக காணப்படும்வரை.
ஆ) கிறிஸ்துவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்கள் தேவகுமாரனைப் பற்றும் அறிவில் ஒருமைப்பட்டவர்களாக காணப்படும்வரை.
இ) கிறிஸ்துவுக்குள் விசுவாசிகளாக பரிசுத்தவான்கள் கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரை. 2 பேதுரு 1:5-8.

61. இப்பொழுது கிறிஸ்துவுக்குள்ளான பரிசுத்தவான்கள் யார்? என்று தியானிப்போம். இது குறித்து ஏழாம் சபை கால தூதன் என்ன கூறுகிறார்? எபே.1:1 குறித்து: பவுல் கிறிஸ்தவர்களுக்கு இதை எழுதுகிறான். இது பாலகர்களுக்கல்ல. இது மாமிசம் புசிக்கக்கூடியவர்களுக்கு. அவர்கள் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் அல்லது பரிசுத்தவான்கள். வெளி.18:4-ன் படி அவளை விட்டு வெளியே வந்தவர்கள். உலகத்திலிருந்து, ஸ்தாபன சபைகளின் பாரம்பரியங்களிலிருந்து வெளியே வந்தவர்கள். இவர்கள் வெளியே அழைக்கப்பட்டு, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றவர்கள், தேவனுடைய ஆசீர்வாதங்களினால் நிரப்பப்பட்டு, பரிசுத்தவான்களாய் ஒன்று கூடி உன்னதங்களில் உட்கார்ந்திருக்கிறார்கள். இவர்கள் இந்த பூமியில் வாழ்ந்தாலும் இவர்களுடைய ஆவி இவர்களை பரலோகத்தின் சூழ்நிலைக்கு கொண்டு வந்துள்ளது. இவர்கள் தங்கள் ஆத்துமாவில் பரலோகத்தைச் சேர்ந்தவர்களாயிருக்கிறார்கள். நீங்கள் கிறிஸ்துவுக்குள்ளிருக்கும்போது அவருடைய சரீரத்துக்குள்ளிருக்கிறீர்கள். கிறிஸ்து இயேசுவுக்குள் இருப்பவர்களை சபையாக வெளியே அழைத்து, அவர்களுக்கு வார்த்தையை போதிக்கிறார். கிறிஸ்து இயேசுவுக்குள் பிறந்த சபையாகிய நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் உன்னதங்களில் வீற்றிருக்கிறோம். வெளியே அழைக்கப்பட்டவர்களுக்கு, ஓ, என்னே, நீங்கள் ஒன்றை போதிக்கமுடியும். அது வெளியே அழைக்கப்பட்ட கூட்டம். காணக்கூடாத சரீரம் கிறிஸ்துவே அதை ஒழுங்குப்படுத்துகிறார்.

62. அந்த சபையில் நீங்கள் இருக்கவேண்டும். ஏனென்றால் அவர் அந்த சபைக்காகவே வரயிருக்கிறார். அது கறைதிரையற்ற சபை. நாம் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களாய், பரிசுத்த ஆவியினால் காணக்கூடாத அவருடைய சரீரத்துக்குள் ஞானஸ்நானம் பண்ணப்படுவதன் மூலம் அந்த சபையில் இருக்க முடியும். தேவகுமாரனுடைய இரத்தம் தோய்ந்த பாவ நிவாரண பலி ஒவ்வொரு மணி நேரமும் நமக்கு அங்கு கிடத்தப்பட்டிருக்கிறது. நாம் குற்றமற்றவர்களாக காணப்படுகிறோம். அது தான் கறைதிரையற்ற சபை.
இந்த 60 மற்றும் 61 பத்திகுரியவைகளை நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய உண்மையான சபையின் ஐந்து உறுதியான அடையாளங்கள் என்ற செய்தியில் பத்திகள் 171-175 வரை தியானிக்கலாம்.

63. இக்காலத்திற்குரிய செய்தி உங்களுக்கு மனத்தெளிவு கொடுக்கும் என நினைக்கிறேன். பாருங்கள், ஐந்து வகை ஊழியங்கள் யார் மத்தியில்? மாம்சம் புசிக்கக்கூடிய பரிசுத்தவான்கள் மத்தியில். சபையில் ஏற்கனவே உள்ளேயிருக்கிறவர்கள் மத்தியில். வெளியே அழைக்கப்பட்ட கூட்டத்தின் மத்தியில். அந்த வெளியே அழைக்கப்பட்ட கூட்டம் காணக்கூடாத சபை (Mystical body) அது தான் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை.

64. அப்படியானால் தங்களை ஐந்து வகை ஊழியங்களில் பாஸ்டர்கள், சுவிசேஷகர்கள் என அழைத்துக்கொண்டு மலைகள், காடுகள், பட்டணங்கள், கிராமங்கள் என சுற்றித்திரியும் இவர்கள் யார்? நிச்சயமாக இவர்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய தேவனால் அழைக்கப்பட்டவர்கள் அல்ல, ஏற்படுத்தப்பட்டவர்கள் அல்ல. நீ கிறிஸ்துவின் அந்த காணக்கூடாத சரீரத்தில் இருந்தால் இதை அறிந்து, புரிந்து, உணர்ந்து கொள்ள முடியும். மற்றப்படி முடியவே முடியாது. இக்காலத்திற்குரிய செய்தியில் இருக்கிறோம், செய்தியை போதிக்கிறோம் என்று கூறும் அநேக பாஸ்டர்கள், சுவிசேஷகர்கள் ஊழியம் தடம்புரண்டு செல்வதை இதன் மூலம் நீங்கள் அறிந்து அவர்கள் தேவனால் ஏற்படுத்தப்பட்டவர்கள் அல்ல என்பதை புரிந்து கொள்ளலாம். ஒருவன் தன்னை பாஸ்டர் என அழைத்துக்கொண்டு, அவர் ஊர்ஊராக சுற்றிக்கொண்டு திரிகிறவராயிருப்பாராகில் அவர் தேவசித்தத்திற்கு புறம்பாக ஊழியம் செய்கிறவரென்று நீங்கள் உடனே புரிந்து கொள்ளலாம். அப்படிப்பட்டவனுடைய சபையை விட்டு விலகுங்கள் என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் உங்களுக்கு அழைப்பு கொடுக்கிறேன். அவர் நிச்சயமாக உங்களை சத்தியத்திற்குள் வழிநடத்த முடியாது. ஏனென்றால் அவர் அழைக்கப்படவில்லை.

65. கிறிஸ்துவின் சரீரமாகிய சபை என்பது எது? இது நமது மத்தியிலுள்ள ஏல் பெத்தேல் சபை அல்ல, மணவாட்டி கூடாரம் அல்ல, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சபை அல்ல, இயேசு கிறிஸ்துவின் ஜெப வீடு அல்ல, கல்வாரி சபை அல்ல, சென்னை சபை அல்ல. மேலும் இது போன்ற அநேக சபைகள் நம் மத்தியிலுள்ளதை நீங்கள் நன்கு அறிவீர்கள். இவைகள் யாவும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை அல்லவே அல்ல. மேலும் மணவாட்டி சபையும் அல்ல. இவைகள் யாவும் விசுவாசிகளையும், அவிசுவாசிகளையும், பாவனை விசுவாசிகளையும் கொண்ட ஒரு கதம்பம். இந்த சபைகளை நீங்கள் உங்கள் கண்களால் காணலாம். ஆனால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சரீரமாகிய சபை ஒரு காணக்கூடாத சரீரம். (Mystical Body) இதை நீங்கள் உங்கள் கண்களால் காண முடியாது. இது, சபை ஆரம்பமான பெந்தேகொஸ்தே நாள் முதல் சபை எடுத்துகொள்ளப்படும் வரை (Rapture) மறுபிறப்பு அடைந்த (Reborned) மக்களை கொண்டது. It is composed of the whole number of spiritually reborn persons from the day of Pentecost to Rapture. காணக்கூடாத சரீரத்தில் அவயவங்களாக உள்ள மறுபிறப்பு அடைந்த தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தவான்கள் மேற்கூறிய காணக்கூடிய சபைகளில் உண்மையான விசுவாசிகளாக காணப்படலாம். இல்லாமலும் இருக்கலாம். ஆனால் ஒன்று மட்டும் உண்மை. கர்த்தர் ஐந்து வகை ஊழியத்திற்கென ஏற்படுத்தப்பட்ட ஒருவன் அந்த சபையில் பாஸ்டராக காணப்படுவாராகில் நிச்சயமாக அங்கு ஒரு மணவாட்டியாவது இருப்பாள். அவளுக்காகவே கர்த்தர் அந்த உண்மையான ஊழியக்காரனை வைத்திருக்கிறார். மற்றப்படி அவளை அங்கு வைக்கமாட்டார். கள்ளகபடமுள்ள வேலையாளை பாஸ்டராக கொண்ட சபையில் மணவாட்டி இருக்கவேமாட்டாள். அப்படியிருந்தாலும் அவள் பாஸ்டரை அடையாளம் கண்டவுடன் அங்கிருந்து விலகிவிடுவாள்.

66. ஒருவன் ஆவியில் மறுப்பிறப்படைந்தால் அது அவனை கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் உலகமெங்குமுள்ள அவயவங்களோடு அவனையும் ஒரு அவயவமாக்குகிறது. உங்கள் மத்தியிலுள்ள ஏல் பெத்தேல் சபையிலும், கல்வாரி சபையிலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சபையிலும் அவயவங்களாக அல்ல. By the baptism of HolySpirit we are brought into the member of the body of Jesus Christ which is all over the world. இந்த சபைக்காக தான் கர்த்தர் தமது ஐந்து வகை ஊழியங்களை ஏற்படுத்தியுள்ளார்.

67. தேவனுடைய இராஜ்யம் இந்த பூமியில் பரிசுத்தவான்களுடைய இருதயத்திலுள்ளது. அது தான் காணக்கூடாத சரீரம், பரிசுத்த ஆவி. Potentially the kingdom of God is in the earth, now in the hearts of His saints. That is the mystical body, the Holy Spirit.

68. இவர்கள் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும் எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகம் தீர்க்கப்பட்டவர்கள். 1கொரி. 12:13 They are united together as one body in Christ by the baptism of the Holy Spirit. இந்த காணக்கூடாத சபைக்கு தலை கிறிஸ்து. எபே. 5:23. இந்த சபையானது கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்துக்கும், அவருடைய எலும்புக்கும் உரியவர்களாயிருக்கிறார்கள். எபே.5:30 இது கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமிக்கப்பட்டுள்ளது. 2கொரி. 11:2. இது கர்த்தருடைய வருகையில் மேகங்கள் மேல் அவரோடே கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, எப்பொழுதும் அவருடனே கூட இருக்கும். 1தெச 4:17.

69. இது தேவன் தம்முடைய சுய இரத்தத்தினாலே சம்பாதித்த சபையாகும். அப். 20:28. பாருங்கள், இரத்தத்தில் ஜீவன். லேவி. 17:11. ஆம் இது தேவன் தம்முடைய ஜீவனை கொடுத்து சம்பாதித்த சபை. ஆதலால் தான் இது அவருடைய மாம்சத்துக்கும் அவருடைய எலும்புக்கும் உரியதாயுள்ளது. பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார், பாஸ்டர் ஜான் ஐசக் போன்றவர்கள் தங்களுடைய சுய ஞானத்தினால், சாதுரியமான பேச்சினால் சம்பாதித்த சபை அவர்களுடைய மாம்சத்துக்கும், எலும்புக்கும் உரியதாகவேயிருக்கும். ஆதலால் தான் அங்கே பாஸ்டர் வணக்கம் காணப்படுகிறது.

70. தேவன் சபை காலங்களில் ஒரு தனிப்பட்ட கூட்டத்தினரோடு அல்லது ஒரு குழுவோடு தொடர்பு கொள்வது கிடையாது. மாறாக ஒரு தனிப்பட்ட நபருடன் செயல்படுகிறார். ஆதலால் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை ஒரு கூட்டமாகவோ அல்லது ஒரு குழுவாகவோ காணப்படவே, காணப்படாது. ஆதலால் தான் நான் கூறுகிறேன், உங்கள் சென்னை சபை கிறிஸ்துவின் சரீரமாகிய சபை அல்ல. இயேசு கிறிஸ்துவின் ஜெப வீடு கிறிஸ்துவின் சரீரமாகிய சபை அல்ல. மாறாக அது மூன்று வகையான ஜனங்களை கொண்ட ஒரு கதம்பம்.

71. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது உலகத்திலிருந்து அழைக்கப்பட்டு, மற்றொரு இராஜ்யத்தை சுதந்தரிக்க பிரித்தெடுக்கப்பட்ட ஜனங்களை கொண்டது. இவர்கள் ஒரு கூட்டமாக, ஒரு குருப்பாக, ஒரு ஸ்தாபனமாக இருக்கமாட்டார்கள். இவர்கள் ஒரு காணக்கூடாத, புரிந்து கொள்ள முடியாத சரீரமாக இருப்பார்கள். அதாவது பரிசுத்த ஆவியின் காணக்கூடாத சரீரம்.

72. The true church of the living God is the people of God, that has been called out of the world, to serve in another kingdom. It can never be any certain group. It can never be an organisation. It is a mystical body, the Holy Spirit. யோ.3:8, 1கொரி.2:14,15.

73. இந்த சரீரத்தில் அவயவமாயுள்ளவர்கள் இரத்தத்தினாலாவது, மாம்ச சித்தத்தினாலாவது, புருஷருடைய சித்தத்தினாலாவது பிறவாமல் தேவனாலே பிறந்தவர்கள். யோ.1:13.

74. இந்த சரீரம் தங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்துக்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்கு தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததி. இராஜரீகமான ஆசாரிய கூட்டம். பரிசுத்த ஜாதி. அவருக்கு சொந்தமான ஜனம். 1பேதுரு. 2:9

75. இவர்கள் இந்த உலகத்திலிருந்து வெளியே அழைக்கப்பட்டு, பரிசுத்த ஆவியின் அபிசேஷகத்தை பெற்றவர்களாய், தேவனுடைய ஆசீர்வாதத்தினாலே நிரப்பப்பட்டு, பரிசுத்தவான்களாய் உன்னதத்தில் உட்கார்ந்து இருக்கிறார்கள். அதாவது இவர்கள் சரீரத்தில் இப்பூமியில் காணப்பட்டாலும், தங்களுடைய ஆவியில் பரலோகத்தின் சூழ்நிலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளார்கள். தங்கள் ஆத்துமாவில் முற்றிலுமாக பரலோகத்தைச் சேர்ந்தவர்களாயிருக்கிறார்கள். இதை தான் அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியருக்கு எழுதும்போது: அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார் என்கிறான். எபே.1:3 இவர்கள் குடியிருப்பு பரலோகம். பிலி.3:20. இவர்கள் பங்கு ஜீவனுள்ளோர் தேசத்தில் தான். இந்த பூமியில் இல்லை. சங். 142:5. இவர்கள் இம்மையில் தங்கள் பங்கை பெற்றுள்ள உலக மக்கள்அல்ல. சங்17:14.

76. முடிவாக இது பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற் பேரானவர்களின் சர்வ சங்கமாகிய சபை. எபி.12:23. இவர்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டவர்கள். இவர்கள் கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களுமாயிருக்கிறார்கள். ஒரே ஆவியினால் ஒரே சரீரத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டவர்கள். இவர்கள் மணவாட்டி என்று அழைக்கப்படுகிறார்கள். இவள் கிறிஸ்துவின் சரீரம். அவருடைய சபை. கர்த்தர் ஆதாமின் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அதை மனுஷியாக உருவாக்கி அவனிடத்தில் கொண்டு வந்தார். அவன், இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாயிருக்கிறாள் என்றான். ஆதி. 2:21-23. அவர்கள் ஒரே மாம்சம். ஆதி 2:24 God opened up the side of Adam and took out of there a helpmate for him, the bride. அவ்வண்ணமாகவே தேவன் கல்வாரியில் இயேசு கிறிஸ்துவின் விலாவிலிருந்து அவருடைய மணவாட்டியை வெளியே எடுத்தார். யோ. 19:34. அவள் அவருடைய எலும்புக்கும் மாம்சத்துக்கும் உரியவளாயிருக்கிறாள். God opened up the side of Jesus and took out of there his helpmate, the bride.

77. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபையாகும். The true church, which is the body of Christ, the fullness of Him that filleth all in all. எபே.1:23. சபை என்றால், அதற்கென்று உபதேசங்கள் இருக்கவேண்டும். இந்த சபையானது இந்த இந்த உபதேசங்களுக்காக, கொள்கைகளுக்காக நிற்கிறது என கூறவேண்டும். சபையானது மனுஷர்களுடைய கோட்பாடுகள் மீது அல்ல, பாஸ்டரது உபதேசங்களின் மீது அல்ல, மாறாக கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவருடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டிருக்கவேண்டும். அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக் கல்லாயிருக்கிறார். அவர் மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது. எபே. 2:20,21. Now to be a church, we got to have a doctrine – the doctrine, the church stands for what we stand for, the principle, the doctrine of the church. (A total deliverance, para 30).

78. உள்ளூர் சபைகள் (Local churches) என்பது என்ன? இது தான் உங்கள் ஏல் பெத்தேல், கல்வாரி சபை, மணவாட்டி கூடாரம், இயேசு கிறிஸ்துவின் ஜெப வீடு, சென்னை சபை போன்றவை. இது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்ற விசுவாசிகளின் ஐக்கியம். ஒருவன் ஜலத்தினால் பிறப்பது அவனை விசுவாசிகளோடு ஐக்கியத்தில் சேர்க்கிறது. By water Baptism we are brought into a fellowship of the believers. இது விசுவாசிகள் என்று தங்களை அறிக்கை செய்யும் ஒரு காணக்கூடிய சரீரம். It is a visible body of professed believers. உங்கள் போதகர்கள் இது தான் மணவாட்டி சபை, கிறிஸ்துவின் சரீரமாகிய சபை என்று கூறிக்கூறியே உங்களை மோசம் போக்குகிறார்கள். ஏனென்றால் அவர்கள் குருடர்கள் குருடர்களுக்கு வழிக்காட்டிகளாக இருக்கிறார்கள். முடிவில் இருவரும் குழியில் விழப்போகிறார்கள். இந்த சபையில் தான் விசுவாசிகள், அவிசுவாசிகள், பாவனை விசுவாசிகள் இருக்கிறார்கள். கிறிஸ்துவுக்குள் எனக்கு பிரியமான சகோதரனே, சகோதரியே நீங்கள் இத்தகைய ஒரு கூட்டத்துக்குள் தான் இருக்கிறீர்கள். இங்கு மூப்பர்கள் (elders), உதவிக்காரர்கள் (deacons), காரியதரிசி, செயலாளர் (secretary), பொக்கிஷதார் (treasurer), தர்மகர்த்தா (trustee) போன்ற பதவிகள் உண்டு. இவைகள் சபை மக்களால் ஏற்படுத்தப்பட்ட பதவிகள்.

79. தேவனால் ஏற்படுத்தப்படாத பலர் தங்களுக்கென்று ஒரு கூட்டத்தைச் சேர்த்துக் கொண்டு, அதற்கு தங்களை தலைவர்களாக ஏற்படுத்திகொள்கிறார்கள். அந்த கூட்டத்தை தேவனுடைய சபை என்றும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சபையென்றும் பற்பல பெயர்களால் அழைத்து, தன்னை அதற்கு மேய்ப்பன் என்று பிரகடனம் செய்து கொள்கிறார்கள். மக்களை வஞ்சிக்கிறார்கள். பாருங்கள், இது ஒரு கொடிய வஞ்சிப்பின் காலம். இவள் தன் மிகுதியான இனிய சொற்களால் பலரை வசப்படுத்தி, தன் உதடுகளின் மதுர வாக்கினால் அவர்களை இணங்க பண்ணுகிறாள். அவர்கள் அவள் பின்னே ஒரு மாடு அடிக்கப்படும்படி செல்லுவதைப்

போலவும், ஒரு மூடன் விலங்கிட்டப்பட்டு தண்டனைக்குப் போவது போலவும், ஒரு குருவி தன் பிராணனை வாங்கும் கண்ணியை அறியாமல் அதில் விழத் தீவிரிக்கிறது போலவும் அவளுக்கு பின்னே போகிறார்கள். அவள் ஜெப வீடு பாதாளத்துக்கு போகும் வழி. நீதி.7:21-27.

**80.** இதனால் தான் சகோ.காலேப் யோசுவா ஒரு சபைக்குள் சென்றால் அங்கு பிரச்சனை உருவாகிறது. பிரிவினை உண்டாகிறது. பாருங்கள், இது குறித்து செய்தி என்ன கூறுகிறது? அங்கிருந்த ஜனக் கூட்டமானது, விசுவாசிகள், அவிசுவாசிகள், பாவனை விசுவாசிகள் என்ற விதமாய் சிதறி கொண்டிருந்த நேரத்தில்; ஆண்டவரே, யாரிடத்தில் போவோம்? என்று கூறினவன் இந்த பேதுரு தான். அன்று அங்கு கூடியிருந்த ஒரு கூட்ட ஜனத்தில் இந்த மூன்று பிரிவான ஜனங்கள் காணப்பட்டதை நாம் வாசித்த அதிகாரம் கூறுகிறது. இத்தகைய பிரிவுக்கு காரணம் என்னவெனில், இயேசு அவ்விதமாக தம்முடைய வார்த்தையை பிரசங்கித்தார். அவருடைய பிரசங்கம் அந்த சபையில் பிரிவினை உண்டாக்கியது. ஆனாலும் அது நிச்சயமாக அவ்விதம் தான் செய்யப்படவேண்டும். (மூவகை விசுவாசிகள், பக்கம் 12, பத்தி 2, நாள் 24.11.1963).

81. பாருங்கள், சென்னை, சூளை, இயேசு கிறிஸ்துவின் ஜெப வீட்டில் இதே யோவான் 6வது அதிகாரத்தில் இந்த மூவகை விசுவாசிகள் என்ற செய்தியின் வேத பகுதிகளை நான் எடுத்து பிரசங்கிக்கும்போது தான் அவிசுவாசிகளும், பாவனை விசுவாசிகளும் பிரச்சனைகளை உருவாக்கினார்கள். ஆனால் சபை பாஸ்டர் சகோ.ஜான் ஐசக் அவர்களோடிருந்து, அவர் யார் என்பதை அந்த நேரத்தில் வெளிப்படுத்தினார். நான் அவரை அடையாளம் கண்டு கொண்டேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். மந்தையின் தவறுகளை கண்டு கண்டிக்காத மேய்ப்பன் ஒரு வஞ்சகனே. ஜனங்கள் தவறுகளை கண்டு கண்டிக்காத ஊழியக்காரன் ஒரு வஞ்சகனே. பெயருக்கும், புகழுக்கும், தசமபாகத்திற்கும், காணிக்கைகளுக்கும், கனத்திற்கும், தேவனுடைய வார்த்தையை, இக்காலத்துக்குரிய செய்தியை மறுதலிக்கிறவன் ஒரு வஞ்சகனே. பாருங்கள், யாரும் என்னோடு இணைந்து போகாமல் இருக்கலாம், ஊழியக்காரர்கள் என்னோடு இணைந்து போகாமல் இருக்கலாம், சபைகள் என்னோடு இணைந்து போகாமல் இருக்கலாம். அது என்னை எந்த அளவும் பாதிக்காது. (Adoption, para 57-61)

82. இந்த சபையில் தான் கண்காணி (Overseer/Bishop –Episkopos (Gk) எபிஸ்கோப்பாஸ்), மூப்பர் Elder/Presbuteros பிரஸ்டியுட்ராஸ் மற்றும் உதவிக்காரர் Deacons டியக்கெபினோஸ் போன்ற பதவிகள் உண்டு. மூப்பர் என்பது ஒரு மனிதனையும், கண்காணி என்பது அவரது உத்தியோகத்தையும் குறிக்கிறது. கண்காணி, உதவிக்காரர் போன்ற பதவிகள் ஒருவனுடைய விருப்புக்குட்பட்டபணி. கண்காணியை விரும்புகிறவன் என்று 1 தீமோ.3:1-ல் கூறப்பட்டுள்ளது. இது மனப்பூர்வமான பணி. 1பேதுரு. 5:2. ஆனால் ஐந்து வகை ஊழியங்கள் ஒருவனுடைய விருப்பத்திற்குட்பட்டது அல்ல, தேவனே அவனை நியமிக்கிறார். அவன் அதை மறுக்க முடியாது.

**83.** முதலாவதாக விசுவாசி, இவன் தான் உண்மையாக விசுவாசிப்பவனாக இருக்கிறான். அதாவது தேவனை, தேவனுடைய வார்த்தையை, இக்காலத்துக்குரிய செய்தியை, செய்தியாளனை விசுவாசிக்கிறவனாயிருக்கிறான். இவன் தான் சபையில் முதன்மையான இடத்தைப் பெறுகிறான். இவன் தேவனுடைய வார்த்தையையும் இக்காலத்துக்குரிய செய்தியையும் விசுவாசிப்பதோடு மட்டுமல்ல அதன்படி நடக்கிறவனுமாயிருக்கிறான். நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தை கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதன்படி செய்கிறவர்களாயும் இருங்கள். கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செயலில் பாக்கியவனாயிருக்கிறான். யாக். 1:22,25. அப்படியே ஆவியில்லாத சரீரம் செத்தாயிருக்கிறது போல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது. யாக். 2:26.

**84.** அவிசுவாசிகள் தாங்கள் சீஷர்கள் என்று அழைக்கப்பட்டு, அவர்கள் முதகில் தட்டிக்கொடுக்கும் வரை சரியான காரியங்கள் செய்வார்கள். ஆனால் சத்தியமும், கடிந்துகொள்ளுதலும் வரும்போது, அவர்கள் விசுவாசத்துக்கு முரணாக காணப்பட்டு, அதை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இது தானே 2004 பிப்ரவரி மாதம் சூளை, இயேசு கிறிஸ்துவின் ஜெப வீட்டில் நடந்தது. ஆனாலும் இவர்கள் வெளியே சென்ற பிரசங்கித்து பிசாசுகளை துரத்துவார்கள். இருந்தாலும் அவர்கள் அவிசுவாசிகளே. நீங்கள் தேவனுடைய வார்த்தையிலிருந்து, இக்காலத்துக்குரிய செய்தியிலிருந்து ஒன்றை கூறினால், அது அவர்களுடைய சூழ்நிலைக்கு ஒத்துவராததாக இருந்தால், அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளாமல் உங்களுக்கு எதிராக வெளிநடந்து நான் அதை விசுவாசிக்கமாட்டேன் என்று கூறுவார்கள். இவர்கள் தோற்றத்தில் பக்தியுள்ளவர்களாக காணப்பட்டாலும், வார்த்தையின் பேரில் பின்வாங்கிபோகிறவர்களாயிருக்கிறார்கள்.

85. பாவனை விசுவாசி ஒரு ஏமாற்றுக்காரன், சண்டாளன், கூடவேயிருந்து குழிபறிப்பவன். இவர்கள் தங்கள் ஜீவனத்திற்காகவும், ஊழியத்தின் உபரியான பணம் வரவுக்காகவும் தேவனுடைய வார்த்தையை, இக்காலத்துக்குரிய செய்தியை விற்று வருகின்றனர். பாருங்கள் கூடுதல் தசமபாகம் காணிக்கைகளுக்காக ஒரு விசுவாசி அவிசுவாசியை திருமணம் செய்யலாம் என்ற சாட்சியை சபையில் அனுமதிக்கிறார்கள். இவர்கள் மிகவும் திறமைசாலிகள். இவர்களுடைய முன் தோற்றமோ பயபக்தியுள்ள காட்சியாகும். ஆனால் இவர்களுடைய ஜீவியம் அவர்கள் யாரென்று நிருபிக்கிறது. அது தான் உண்மை. இவர்கள் சகோதரனே, அல்லேலூயா! தேவனுக்கு மகிமை என்று கூறினாலும், உங்களிடமிருந்து தசமபாகம் காணிக்கைகளை பிழிந்து எடுப்பதற்காகவே அவர்கள் அவ்விதம் கூறுவார்கள். தேவபக்தியின் வேஷத்தை தரித்தவர்கள். ஒருவன் கடிந்து கொள்ளுகிறதோடு, தேவனுடைய வார்த்தையை, இக்காலத்துக்குரிய செய்தியை அவரிகளிடம் கொண்டுவரும்போது அவர்கள் அவனை குறித்து தங்கள் சபையை எச்சரித்து அவனுக்கு செவிக்கொடுக்காதீர்கள் என்று கூறுவார்கள். இதை தானே உங்கள் மேய்ப்பர்கள் தங்கள் சபைகளில் என்னை குறித்து போதித்து வருகிறார்கள்.

86. லோக்கல் சபை ஒரு குறிப்பிட்ட கொள்கை, உபதேசங்களின் அடிப்படையில் ஒருமனப்பட்டவர்களின் ஐக்கியம். இவர்கள் கூறலாம் நாங்கள் தேவனுடைய வார்த்தை, இக்காலத்துக்குரிய செய்தியின் அடிப்படையில் மூல உபதேசங்களின் கீழ் இருக்கிறோம் என கூறலாம். ஆனால் அது ஒரு வஞ்சிப்பு.

அ) பாருங்கள், வலசரவாக்கம் பாஸ்டர் சாமுவேல் சபை தேவனுடைய வார்த்தையில் எங்கெல்லாம் ஏழாம் தூதன் என்று வருகிறதோ அவை அனைத்தும் ஏழாம் சபை காலத் தூதனையே குறிக்கிறது. அது

சகோ.வில்லியம் மாரியன் பிரன்காம் என்பதாகும் என உபதேசத்தின் அடிப்படையில் ஒருமனப்பட்டவர்களின் கூட்டம். அடுத்து பெண்கள் சுடிதார் ஆடைகள் அணியக்கூடாது. ஆனால் தங்கள் பிள்ளைகள் பள்ளிகளுக்கு செல்லும் போது அவைகளை அணிந்து செல்லலாம் என்ற உபசேத்தின் அடிப்படையில் இயங்கும் கூட்டம். திருமணத்தில் நல் மனச்சாட்சிக்கு உடன்படிக்கைக்கு அடையாளமாக ஒரு பெண் தாலி/மோதிரம் அணியக்கூடாது என்பதனான உபதேசம். இப்பொழுது புதிதாக இவர்களுக்கு ஒரு வெளிப்பாடு கிடைத்திருக்கிறது. அதாவது செபெதேயுவின் குமாரனாகிய யாக்கோபும் யோவானும் இயேசுவின் மகிமையிலே அவரது வலதுபாரிசத்தில் ஒருவனும் இடது பாரிசத்தில் ஒருவனுமாக இருக்கவிரும்பினர். இயேசு அதை குறித்து: அது எவர்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கேயல்லாமல், மற்றொருவருக்கும் அதை அருளுவது தமது காரியம் அல்ல என்றார். (மாற்.10:35-45). இவர்களுக்கு கிடைத்த வெளிப்பாடு என்ன? அப்போஸ்தலனாகிய பவுல் இயேசுவின் வலது பாரிசத்திலும், ஏழாம் சபைக்கால தூதனாகிய வில்லியம் மாரியன் பிரன்காம் இயேசுவின் இடது பாரிசத்திலும் உட்காருவார்கள் என்பதாகும். இந்த பிசாசின் உபதேசத்திற்கும் ஆமென், ஆமென் என்று கூறிக்கொண்டு பாஸ்டர் சாமுவேல் பின் ஒரு கூட்டம். ஆனால் இவருடைய உபதேசம் தீர்க்கதரிசியின் செய்திக்கு மாறானது. வூாசியுங்கள் நான் எப்படி ஜெயம் கொள்ளுவது, பத்தி 158,159. நாள் 25.8.1963. இவைகள் யாவும் இவர்களது பாஸ்டர்களின் உபதேசங்கள். இவ்வாறாக இவர்கள் தேவனுடைய வார்த்தையையும் செய்திக்கு எதிர்மாறாக இயங்கி வருகிறார்கள் என்பதை ஆவிக்குரியவர்கள் அறிவார்கள்.

ஆ) அடுத்து பாருங்கள் பட்டாபிராம் பாஸ்டர் எட்வர்ட் சபை. 1963-ல் எடுத்துக்கொள்ளப்படுதல் நடந்து விட்டது. நாம் ஆயிர வருட அரசாட்சியின் கீழ் இருக்கிறோம். இனி நமக்கு ஞானஸ்நானம் தேவையில்லை, இராப்போஜனம் தேவையில்லை என்ற உபதேசங்களின் அடிப்படையில் ஓடிக்கொண்டிருக்கும் ஒரு கூட்டம்.

இ) மேலும் பாருங்கள் பல்லாவரம் பாஸ்டர் சாமுவேல் தங்கமணி சபையில் ஐயா நாங்கள் பிரதி வெள்ளிக்கிழமை சபையில் உபவாசம் இருக்கிறோம். எங்கள் இல்லங்களில் நாங்கள் காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணி வரை உபவாசம் இருக்கிறோம். ஆனாலும் நாங்கள் எங்கள் அலுவலகங்களுக்கு சென்று, தொழிலுக்கு சென்று எங்கள் பணிகளை செய்கிறோம். ஆனால் எங்கள் பெண்கள் மட்டும் சபைக்கு காலை 10.00 மணிக்கு வருவார்கள். மதியம் 2.00 மணிக்கு சென்று விடுவார்கள். இது தான் எங்கள் உபவாசம் கூட்டம். இப்படி ஒரு உபவாச கூட்டத்தை பிரதி வெள்ளி பாரம்பரியமாக ஆசரிக்கிறார்கள். தங்கள் மனம்போனபோக்கில் உபவாசம் கூட்டம் ஆசரிக்கிறார்கள். இவர்கள் உபவாசம் என்பதன் பொருளை அறியவில்லையே. இவருக்கு பின்னும் ஒரு கூட்ட ஜனங்கள்.

ஈ) மேலும் சூளை, பாஸ்டர் ஜான் ஐசக் சபையை கவனியுங்கள், இங்கு சபையில் ஒரு விசுவாசி, ஒரு ஸ்தாபனத்திலுள்ள அவிசுவாசியை திருமணம் செய்வதில் தவறு இல்லை. நாம் எப்படியும் அந்த அவிசுவாசியை திருமணத்திற்கு பின் விசுவாசியாக மாற்றப்போகிறோமே, ஆனாலும் ஒரு விசுவாசி, ஒரு அவிசுவாசியை திருமணம் செய்வது தவறு தான். அவ்வண்ணமாகவே தேவனுடைய வார்த்தையும் செய்தியும் கூறுகிறது. ஆனால் நாம் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கும் சூழ்நிலையில் இல்லை. நாம் ஒரு அவிசுவாசியை திருமணம் செய்து, திருமணத்திற்குப்பின் அவனை/அவளை விசுவாசியாக மாற்றிவிடப்போவதால் திருமணத்திற்கு முன் அதை ஒரு பிரச்சனையாக கொண்டு வரவேண்டாம் என்ற உபதேசத்தின் அடிப்படையில் தங்களை தாங்களே மெச்சிக்கொள்ளும் ஒரு கூட்டம்.

உ) நான் அவிசுவாசியை திருமணம் பண்ணினாலும் அவள் சத்தியத்தை நேசிக்கிறவளாகவேயிருக்கிறாள். எங்களது திருமணத்திற்குப்பின் அவளை சத்தியத்துக்குள், விசுவாசத்துக்குள் என்னால் வழி நடத்த முடியும் என்கிறார்கள். பிரியமானவர்களே, இதெல்லாம் தேவனுடைய வார்த்தைக்கு புறம்பானது தேவனுடைய வார்த்தை அந்நியநுகத்திலே அவிசுவாசியுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக, அவிசுவாசிகளுடனே விசுவாசிக்கு பங்கேது என்பதே. 2கொரி.6:16-16. ஆனால் எனது விசுவாசத்தினால் நான் அப்படிச்செய்கிறேன் என்கிறார்கள். அது தவறு. இவ்வண்ணமாகவே சிலர், சகோதரனே நாங்கள் விசுவாசத்தில் இன்று ஆயிரவருட அரசாட்சியில் இருக்கிறோம், எடுத்துக்கொள்ளப்படுதல் முடிந்துவிட்டது, கர்த்தருடைய வருகை வந்துவிட்டது என்கிறார்கள். இதெல்லாம் தவறு. இது குறித்து நீங்கள் விசுவாசிக்கும் செய்தி என்ன கூறுகிறது? விசுவாசத்தினால் நான் பெற்றுக்கொள்கிறேன் என்பது போன்றவைகளை ஏற்றுக்கொள்ளாதீர்கள். அப்படி செய்யாதீர்கள். (கண்டும் காணாததுபோல் விடப்படுகிற ஒரு உண்மையான அடையாளம், பத்தி 226) பிரியமானவர்களே, உங்கள் அனுபவத்தில் வஞ்சிக்கப்படாதீர்கள்.

ஊ) இன்னொரு கூட்டம் பாருங்கள் திருமணத்தில் நீங்கள் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கைக்கு அடையாளமாக தாலி/மோதிரம் நம் நாட்டு வழக்கப்படி அணிந்தாலும் சரி,அணியவிட்டாலும் சரி, நீங்கள் எப்படி விரும்புகிறீர்களோ அப்படியே திருமணம் செய்து கொள்ளலாம். நான் (பாஸ்டர்) அதையும், இதையும் நடத்தி வைக்க தயார் என்ற உபதேசம்.

எ) இன்னொரு கூட்டம் திருமணத்தில் மணமகன் மணமகள் ஒருவரையொருவர் முத்தமிடவேண்டும், கர்த்தருடைய இராப்போஜனத்தை நாம் மாலை வேளையிலே ஆசரிக்கவேண்டும் என்ற உபதேசங்களின் அடிப்படையில் கூடும் மக்களைக் கொண்டது.

ஏ) பாஸ்டர் தசமபாகம், காணிக்கை வரவு மீது கண்ணோக்கமாக இருக்கிறார். அவருக்கு உபதேசங்கள் பற்றி என்ன கவலை? அவர் தனக்கு வரும் வரவுகளை காப்பாற்றிக்கொள்ள சபையில் நடக்கும் அக்கிரமங்களைப் பார்த்து மௌனமாக இருக்கவேண்டியதிருக்கிறது. ஏசாவைப் போல் இவ்வுலகின் ஒரு பானை கூழுக்காக பாஸ்டர் தன் சேஷ்டபாகத்தை விற்றுப்போடுகிறார். அதற்காக அவர்களுக்கு என்ன கிடைக்கும்? ஆக்கினையின் குழியில் விழுந்து ஆக்கினைக்குள்ளாவார்கள். சுவிசேஷத்தின் வேசிகளென்று அவர்கள் பேரில் குற்றம் சாட்டுகிறேன். இந்த போதனை குறித்து நீங்கள் குற்றச்சாட்டு என்ற செய்தியில் பக்கம் 76-77ஐ தியானியுங்கள். செய்தி நாள் 7.7.1963.

87. பிரியமானவர்களே, இப்படியாக இந்த சபைகள் தேவனுடைய வார்த்தையையும், இக்காலத்துக்குரிய செய்தியையும் தூக்கி தங்கள் முதுகுக்குப்பின் எறிந்து விட்டு, தங்கள் மனம்போல் வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு கூட்டம். தங்கள் தங்கள் மனம்போல் தங்களுக்கு கோட்பாடுகளையும், உபதேசங்களையும், கற்பனைகளையும், பிரமாணங்களையும் தங்களுக்கு சாதகமான முறையில் தயார் செய்து கொண்டு மணவாட்டி, மணவாட்டி என்று தங்களை அழைத்துக்கொள்ளும் ஒரு கூட்டம். பிரியமானவர்களே, நீங்கள் இப்படிப்பட்டதான ஒரு சபையில் தான் ஐக்கியம் கொண்டிருக்கிறீர்கள் என்பதை மறந்து விடாதீர்கள்.

88. இப்படிப்பட்ட சபைகளின் பாஸ்டர்கள் தேவனால் ஏற்படுத்தப்பட்டவர்கள் அல்ல. இவர்கள் தங்களை தாங்களே பாஸ்டர்களாக நியமித்துக்கொண்டு, அல்லது பணவசதியுள்ள ஒருவனால் தங்களை பாஸ்டர்களாக நியமித்துக்கொண்டு, அல்லது அந்த தரிசனம் கண்டேன், இப்படி தரிசனம் கண்டேன் என்று பொய்யை நம்பும்

ஜனங்களுக்கு ஒரு பொய்யை கூறி தங்களை பாஸ்டர்களாக்கி கொண்ட சபையாகும். இவைகளால் உண்மையான விசுவாசிகளுக்கு எந்தவிதமான பிரயோஜனம் இல்லை. இது அவிசுவாசிகளுக்கும், பாவனை விசுவாசிகளுக்கும் மாத்திரமே பிரயோஜனமான சபையாகும்.

89. இதனால் தான் இவர்கள் மத்தியில் நூற்றுக்கணக்கான பிரிவுகள் உண்டு. ஒவ்வொருவரும் தாங்கள் தான் உண்மையான விசுவாசிகள், மணவாட்டி என்கிறார்கள். ஆனால் அங்கு தேவனுடைய வார்த்தையை காணோம். இக்காலத்துக்குரிய செய்தியை காணோம். தங்கள் சபையிலுள்ள மக்களின் எண்ணிக்கைகளை கொண்டு தாங்கள் தான் உண்மையான சபை, தாங்கள் தான் பெரிய சபை என பெரவலூர் சென்னை சபையை போன்று மார்புதட்டி கொள்கிறார்கள். நாங்கள் தான் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட சபை, ஆதலால் தான் எங்களிடம் கூட்டம் அதிகம் என பெருமையாக பேசிக்கொள்ளுகிறார்கள். ஆனால் இவர்கள் மத்தியில் ஒரே நம்பிக்கையில்லை, ஒரே விசுவாசம் இல்லை, ஒரே ஆவியில்லை. இவர்கள் அனுதினமும் பிரிந்து பிரிந்து தாங்கள் யார் என்பதை வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

90. சென்னை பல்லாவரம், பொழிச்சலூர் பகுதிகளில் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு நாளுக்கு நாள் சபைகள் உருவாகி தங்களை பலர் பாஸ்டராக்கிகொண்டு வருகிறார்கள். இங்கு விசுவாசிகளைவிட பாஸ்டர்கள் எண்ணிக்கைதான் அதிகமாக இருக்குமோ என ஐயப்படுகிறேன். ஆனாலும் இவர்களை நம்பி ஒரு கூட்டம் ஜனங்கள் இவர்கள் பின் செல்லுகிறதைப் பார்த்து பார்த்து உள்ளத்தில் மிகவும் வாதிக்கப்படுகிறேன். ஒருவன் தன் மிகுதியான இனிய சொற்களால் ஒரு சில ஆத்துமாக்களை வசப்படுத்துகிறான். தன் உற்றார் உறவினர்களின் சிலரை தன் பக்கம் இழுத்துக் கொள்ளுகிறான். அல்லது தன்னுடன் வேலை செய்யும் சில நண்பர்களை தன் பக்கம் சேர்த்துக்கொள்கிறான். அல்லது தான் சென்று கொண்டிருக்கும் சபையை உடைத்து, சபையில் பிரிவினைகளை உண்டாக்கி அதிலிருந்து சில ஆத்துமாக்களை தனக்கென்று ஆதாயப்படுத்திக் கொள்ளுகிறான். இப்படியாக தனக்கு அறிமுகமான மக்கள் மத்தியிலிருந்து தன்னை பின்பற்ற வைக்கிறான். ஆக ஒட்டுமொத்தமாக தன் உதடுகளின் மதுரவாக்கினால் அவர்களை தன் உபதேசங்களுக்கு, அல்லது அவர்களது உபதேசங்களுக்கு தான் இசைந்து போவதாக கூறி அவர்களை இணங்கப்பண்ணுகிறான். இவ்வாறாக வஞ்சிக்கப்பட்ட, ஏமாற்றப்பட்ட ஜனங்கள் அவன் பின்னே செல்லுகிறார்கள். முடிவில் அவன் மடிந்து போகிறான். அவனைச் சேர்ந்த ஜனங்கள் சிதறி அவமாய் போகிறார்கள். இது தான் இன்றைக்கு மேற்கூறிய லோக்கல் சபைகளின் நிலை.

91. எவ்வாறு ஒரு அரசியல் வாதி தன் சாமர்த்தியத்தினால் தனக்கு ஒரு கூட்டம் ஜனங்களை ஆதாயப்படுத்தி, அரசியலில் நல்ல சம்பாத்தியம் பண்ணி தன்னை ஒரு பெரியவனாக்கி கொள்ளுகிறானோ அவ்வாறாகவே இந்த சபை பாஸ்டர்களும் தங்களுக்கென ஒரு கூட்டம் மக்களை மணவாட்டி என்ற போர்வையின் கீழ் ஆதாயப்படுத்தி தங்களுக்கு சொத்து சுகங்களை (வீடு, சபை கட்டிடம், ரொக்கப்பணம்) சேர்த்துக் கொள்ளுகிறார்கள். ஊழியத்திலிருந்துக்கொண்டு பணம் சேகரிப்பது போன்ற காரியங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அரசியலில் ஏமாளிகள் தொண்டர்கள். சபையில் ஏமாளிகள் அவிசுவாசிகளும் பாவனை விசுவாசிகளுமே உண்மையான விசுவாசிகளை இவர்கள் ஒருக்காலும் ஏமாற்ற முடியவே முடியாது.

92. ஆனால் மணவாட்டி எங்கிருக்கிறாள்? இந்த கூட்டத்துக்குள்தான். விசுவாசிகள் என்று அழைக்கப்படுபவர்கள் இவள் தான். ஒரு சபையில் அதாவது மேற்கூறிய கூட்டத்துக்குள் மணவாட்டி இருப்பாளாகில், அதாவது உண்மையும் உத்தமுமான விசுவாசிகள் இருப்பார்களாகில் அங்குள்ள பாஸ்டர் நிச்சயமாக தேவனுடைய மனுஷனாக இருப்பார். மேலும் அங்கு அவர் இதர நான்கு வகை ஊழியங்களையும் அனுமதித்து, அங்குள்ள விசுவாசிகள் எடுத்துக்கொள்ளப்படுதலுக்குரிய விசுவாசத்தில் வளர அனுகூலமும் ஒத்தாசையுமாக இருப்பார். அந்த சபை மேய்ப்பன் கள்ளகபடமுள்ள வேலையாளராக இருப்பாராகில் அந்தகூட்டத்தில் மணவாட்டிக்கு இடமேயில்லை. முற்றிலுமாக அந்த கூட்டம் அவிசுவாசிகளையும், பாவனை விசுவாசிகளையும் கொண்டதே! உண்மையான விசுவாசி அங்கிருந்தால், அவள் அப்படிப்பட்ட மேய்ப்பனின் கீழ் இருக்கமாட்டாள்.

93. அடுத்து ஒரு முக்கியமான காரியத்தை கவனியுங்கள். சபைக் காலங்களில் தேவன் ஒரு குருப்புடன், ஒரு கூட்டத்துடன், ஒரு சபையுடன் தொடர்பு கொள்வது கிடையாது. ஆதலால் நிச்சயமாக உங்கள் ஏல் பெத்தேலுடன், மணவாட்டி கூடாரத்துடன், கல்வாரி சபையுடன் தொடர்பு கொள்ளவே மாட்டார். ஆதலால் மேற்கூறிய சபைகளின் மேய்ப்பர்களை நம்பி மோசம்போகாதிருங்கள். அந்த சபைகளில் மணவாட்டியிருப்பாளாகில் தேவன் அவர்களோடு தனிப்பட்ட முறையில் தொடர்பு கொள்ளுகிறார். இடைப்படுகிறார். ஆம் சகோதரனே, சகோதரியே நீ மணவாட்டியாயிருப்பாயாகில் தேவன் உன்னோடு மட்டுமே இடைப்படுகிறார். நீ சார்ந்திருக்கும் உன் சபையோடு அவர் இடைப்படுவதில்லை என்பதை நன்கு புரிந்து கொள்.

94. மக்கள் ஊழியக்காரர்களிடம் வெளிபடும் சில அற்புத அடையாளங்கள் கண்டு ஏமாந்து போய்விடுகிறார்கள். இதற்கு இக்காலத்துக்குரிய செய்தியிலிருக்கிறோம் என்பவர்கள் விலக்கல்ல. பாருங்கள் இந்த சபையில் இந்த பிரசங்கபீடத்தில் இங்கே நின்று மகத்தான அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்யமுடியும். அது அந்த நபர் இரட்சிக்கப்பட்டுவிட்டார் என்று கூட அர்த்தம் ஆகாது. பிசாசுகள் அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்கின்றன. நிச்சயமாக அவைகள் செய்கின்றன. கடைசி நாளில் அவர்கள் அதைக் காட்டிலும் அதிகமாக செய்வார்கள் என்ற வேதம் கூறியுள்ளது. நல்லது, இயேசு: அநேகர் என்னிடத்தில் வந்து, கர்த்தாவே நான் உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளை துரத்தவில்லையா? நான் இதை செய்யவில்லையா? நான் அதை மற்றும் இந்த எல்லாக்காரியங்களையும் செய்யவில்லையா? என்பார்கள். அதற்கு அவர், நான் அதை அறியேன். அக்கிரம செய்கைகாரர்களே என்னை விட்டு அகன்று போங்கள் என்பார். புரிகிறதா? தேவன் தம்முடைய வார்த்தையை காத்துக்கொள்ளுகிறார் என்ற செய்தியில் பத்தி 223ஐ தியானியுங்கள். நான் அறிய ஊழியத்தின் பாதையில் தங்களுக்கு பொருளாதார வசதிகளை, சொத்து சுகங்களை பெருக்கி கொண்டவர்கள் வலசரவாக்கம் பாஸ்டர் சாமுவேல் அவர்களும் மும்பை பாஸ்டர் டேனியேல் கிறிஸ்டியான் அவர்களும் முக்கியமானவர்கள். நீங்கள் ஒரு கிறிஸ்தவனாயிருக்கும்போது உங்கள் சுபாவமே வித்தியாசமாயிருக்கிறது. கிறிஸ்துவின் ஆவி அந்த நபருக்குள் இருக்கிறது. கிறிஸ்து இவர்கள் செய்த காரியங்களை செய்வதில்லை. புரிகிறதா?

95. சிலர் இக்காலத்துக்குரிய செய்தியிலுள்ள சபை மத்தியில் தேவன் ஒரு மகத்தான எழுப்புதலை ஏற்படுத்தி தம்முடைய மணவாட்டியை மற்றவர்களுக்கு அடையாளம் காட்டுவார் என்கிறார்கள். அதோடு மட்டுமல்ல அதை ஒரு உபதேசமாக போதிக்கிறார்கள். இது தவறு. பாருங்கள் இக்காலத்துக்குரிய செய்தி இது குறித்து இவ்வண்ணமாக கூறுகிறது. உலகம் முழுவதிலும் ஒரு மகத்தான எழுப்புதல் உண்டாகும் என்று நீங்கள் எதிர்பார்க்க வேண்டாம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையை தவிர இனி நடக்கப்போவது வேறொன்றுமில்லை. (ஈஸ்டர் முத்திரை, பக்கம் 67, 2வது பத்தி, நாள்.10.4.1965) இப்பொழுது நாம் நம்முடைய சந்ததியில் கர்த்தருடைய வருகையை எதிர்நோக்கி கொண்டிருக்கிறோம். நம்முடைய சந்ததியில் நான் எழுப்புதலை எதிர்பார்க்கவில்லை. கர்த்தருடைய வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். (கிறிஸ்துவின் மணவாட்டியின் காணக்கூடாத இணைப்பு, பக்கம் 9, பத்தி 2, நாள். 25.11.1965).

96. அப்படியானால் இந்நாட்களில் மணவாட்டியின் நம்பிக்கை என்ன? கர்த்தருடைய வருகையை எதிர்நோக்கி கொண்டிருங்கள். உங்கள் தீவட்டியில் எண்ணெய் நிரப்பி ஆயத்தமாக வைத்துக்கொள்ளுங்கள். எப்பொழுதும் ஜெபத்தில் தரித்திருங்கள். இது தான் சபையின் இன்றைய நம்பிக்கை. இது குறித்து கே.ப. 253-ல் பத்தி 198ஐ வாசியுங்கள். Just wait on the coming of the Lord. Keep your lamps trimmed. Keep your lamps are filled with full of oil, praying every hour. That is the hope of the Church, of this hour.

97. விசுவாசிகள் பாஸ்டருக்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். பாஸ்டர் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். அப்பொழுது தேவன் அந்த பாஸ்டர் மூலமாக கிரியை செய்வார். **Obey the pastor and the pastor obey God; then God works through the pastor. (A total deliverance, para 78)** ஆதலால் ஒரு பாஸ்டர் தேவனுடைய வார்த்தைக்கும் இக்காலத்துக்குரிய செய்துக்கும் கீழ்ப்படியாத பட்சத்தில் நீங்கள் அவருக்க கீழ்ப்படியவேண்டும் என்ற தேவையில்லை. பாஸ்டர் மந்தைக்கு தலை. பாஸ்டர் சபைக்கு தலை என்று கூறக்கூடாது. ஏனென்றால் சபைக்கு தலை கிறிஸ்து (எபே.5:23) சிலர் பாஸ்டர் தான் சபைக்கு தலை என்று பாடுவார்கள். நீங்கள் அவர்கள் பாட்டில் மதிமயங்கி விடக்கூடாது.

98. மேய்ப்பன் என்றால் ஆடு மேய்ப்பவன் என்று பொருள். மேய்ப்பன் தன் மந்தையிலுள்ள ஆடுகளை அதாவது விசுவாசிகளை, ஆடு மந்தை மேய்க்கும் ஒரு மேய்ப்பனைப் போல் வழிநடத்தவேண்டும், பாதுகாக்கவேண்டும். சபை தேவனுடைய மந்தை யோ.10:16, அப்.20:28. சபை மந்தைக்கு உருவகமாக கூறப்பட்டுள்ளது. 1பேதுரு 5:2. இது தேவனுடைய வார்த்தையினால் உறுதி செய்யப்பட்ட ஒரு ஊழியமாக இருக்கவேண்டும். மேலும் ஒரு மேய்ப்பன் என்ன செய்ய வேண்டும் என தேவனுடைய வார்த்தை போதிக்கிறதோ அதன்படி அவன் நடக்கிறவனாக இருக்க வேண்டும்.

99. பாஸ்டர் (Pastor) என்ற லத்தீன் வார்த்தை, ஷெப்பர்டு (Shepeherd) என்ற ஆங்கில வார்த்தைக்குரியதாகும். இதற்கான கிரேக்க வார்த்தை பாய்மென் (Poimen).

100. ஒரு மேய்ப்பனுடைய தகுதிகள்:

அ) ஒரு மேய்ப்பன் குற்றஞ்சாட்டப்படாதவனாக இருக்கவேண்டும். அவன் மேல் ஒரு காரியத்தை குறித்து குற்றஞ்சாட்டப்படுமானால் அவன் தன் ஸ்தானத்தை விட்டு இறங்கிவிடவேண்டும். ஆனால் இன்று மேய்ப்பர்கள் தங்களுக்கென்று வீடுகளையும், ஆராதனைக்கென்று கட்டிடங்களையும் கட்டி தங்கள் பெயரில் தக்கவைத்துக்கொண்டு, யாரும் அவர்கள் மீது ஆதாரத்துடன் குற்றம் சாட்டினால், உடனே அந்த ஆத்துமாவை சபையை விட்டு வெளியேறு என்கிறார்கள். ஏன்? சபை கட்டிடம் தன் பெயரில் உள்ளது. சபை தன் பெயரில் உள்ளது. பெயரளவுக்கு இது தேவனுடைய சபை, தேவனுடைய சபையென்று கூறுவார்கள். ஆனால் நீங்கள் அவர்கள் மீது குற்றம் சுமத்துவீர்களானால் உடனே உங்களை வெளியேற்றுவார்கள். இவர் தேவனுடைய சபைக்கு கண்காணியல்ல. மாறாக தன் சபைக்கே கண்காணி.

ஆ) ஒரே மனைவியையுடைய புருஷனாக இருக்கவேண்டும். இந்நாட்களில் இரு மனைவியையுடையவர்களாகயிருந்தாலும் தங்களை பாஸ்டர் என அழைத்துக் கொள்கிறார்கள். ஆனால் இவர் பின்னும் பத்து பேர் இருக்கிறார்கள். இது ஒரு வெட்கக் கேடு.

இ) அவர் ஜாக்கிரதையுள்ளவராக இருக்கவேண்டும். எந்த காரியத்திலும் ஜாக்கிரதையாக நடக்கவேண்டும். ஏனோதானோ என்று பாஸ்டர் ஜான் ஐசக்கை போன்று நடக்ககூடாது. தன் நடத்தையில், உபதேசத்தில் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். ஆனால் இவர் நாளுக்குநாள் தன்னுடைய உபதேசங்களை தன் சூழ்நிலைகளுக்கேற்றாற்போல் மாற்றுகிறவராக இருக்கிறாரே.

ஈ) தெளிந்த புத்தியுள்ளவராக இருக்கவேண்டும். தன் உபதேசத்தில் தெளிந்த புத்தியுள்ளவராக இருக்கவேண்டும். இன்று ஒன்று, நாளை மற்றொன்று உபதேசிக்கிறவனாக இருக்ககூடாது. எந்த உபதேசத்திலும் மனக்குழப்பம் உள்ளவராக இருக்ககூடாது. ஒரு நாள் எடுத்துக்கொள்ளப்படுதல் நடந்துவிட்டது, மறுநாள் இல்லை; ஒரு நாள் பெண்கள் சுடிதார் ஆடைகள் அணியக்கூடாது, மறுநாள் அதை அணிவது தவறு இல்லை. இவ்வாறாக மனதை மாற்றி மாற்றி ஒரு குழப்பவாதியாக இருக்ககூடாது. ஒரு பக்கம் ஒரு விசுவாசி ஒரு அவிசுவாசியை திருமணம் செய்யகூடாது. மறுபக்கம் அதில் தவறு ஒன்றுமில்லை. அவ்வாறாக திருமணம் செய்தவர்கள் இன்று நல்லநிலையில் இருக்கிறார்கள். ஆதலால் அது தவறு இல்லை. இப்படிப்பட்ட உபதேசங்கள் எல்லாம் ஒரு மேய்ப்பனுக்கு தகுதியல்ல. ஏனென்றால் அவர் தெளிந்த புத்தியுள்ளவர் அல்ல.

உ) அவர் யோக்கியதை உள்ளவராக இருக்க வேண்டும். அதாவது நல்நடத்தை உள்ளவராக இருக்கவேண்டும். தன் நடத்தைகளில் பிறருக்கு மாதிரியாக இருக்கவேண்டும். பாருங்கள் தேவனுடைய சபைக்கு கர்த்தருக்குரியதாக வரும் தசமபாகத்தை அனைத்து இதர ஐந்து வகை ஊழியங்களுக்கும் பகர்ந்து கொடுக்கும் ஒரு யோக்கியனாக இருக்கவேண்டும். பொதுவாக அனைத்து காரியங்களிலும் யோக்கியனாக நடந்து வருகிறேன் என்று சாட்சி கூறும் ஒருவராக இருக்கவேண்டும். தேவனுக்கு முன்பாக மட்டுமல்ல மனுஷர்களுக்கு முன்பாகவும் யோக்கியமானதை செய்யவேண்டும்.

ஊ) அந்நியரை உபசரிக்கிறவராக இருக்கவேண்டும். தனக்கு வேண்டியவர்களை வீட்டுக்கு அழைப்பதும், தன் மீது குற்றஞ்சுமத்துகிறவர்களை வீட்டுக்கு வராதே என்று கூறுகிறவர்களாக இருக்ககூடாது. விருப்பு, வெறுப்பு இல்லாமல் அது யாராக இருந்தாலும் அவர்களை ஏற்று கொண்டு உபசரிக்கிறவனாக இருக்கவேண்டும். அதாவது விரோதிகளையும், சிநேகிக்கிறவராக, நேசிக்கிறவராக இருக்கவேண்டும். பாஸ்டர் ஐசக் வசந்தக்குமாரைபோன்று

ஒரே டேபிளில் உபசரித்து சாப்பிட்டுக்கொண்டு அதே டேபிளுக்கு மேலே கத்தியை தொங்கவிட்டவராக இருக்ககூடாது.

எ) போதக சமர்த்தனாக இருக்கவேண்டும். தன் போதனையில் உறுதியாக இருக்கவேண்டும். தன் போதனைகளை அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய உபதேசங்களிலிருந்து கொண்டு வருகிறவனாக இருக்கவேண்டும். தன் சொந்த உபதேசங்களை உபதேசிக்கிறவனாக இருக்ககூடாது. இது எனக்கு தெரியாது, அது எனக்கு தெரியாது ஆதலால் தவறு செய்துவிட்டேன் என்று கூறுகிறவனாக இருக்ககூடாது.

ஏ) மதுபான பிரியனாக இருக்ககூடாது.

ஐ) அடிக்கிறவனாக இருக்ககூடாது. அதாவது அடாவடித்தனம் பண்ணுகிறவனாக இருக்ககூடாது. எதற்கெடுத்தாலும் அடிப்பேன், மிதிப்பேன், உன்னை தொலைத்து கட்டிவிடுவேன் என்று கூறும் குண்டர்கள் நம் மத்தியில் பாஸ்டராக இருப்பது இக்காலத்துக்குரிய செய்திக்கே ஒரு வெட்கக்கேடு.

ஒ) இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனாக இருக்ககூடாது. தசமபாகம், காணிக்கைக்காக ஊழியம் செய்கிறவனாக இருக்ககூடாது. காணிக்கைக்காக வீடு சந்திப்பு என்ற பெயரில் வீடு வீடாக சென்று ஜெபம் பண்ணுகிறவனாக இருக்ககூடாது. காணிக்கை கொடுப்பவர்களை மட்டும் நேசிக்கிறவனாக இருக்ககூடாது. காணிக்கைக்காக சத்தியத்தை மறுதலிப்பவனாகவும் இருக்ககூடாது. ஒருவருடைய தசமபாகம் காணிக்கைக்காக ஒரு விசுவாசி ஒரு அவிசுவாசியை திருமணம் செய்யலாம் என்று உபதேசிக்கிறவனாக இருக்ககூடாது.

ஓ) எல்லாவற்றிலும் பொறுமையுள்ளவனாக இருக்கவேண்டும. ஒரு முற்கோபியாக இருக்ககூடாது. எந்த ஒரு காரியத்திலும் உடனுடன் முடிவு எடுக்காமல் பொறுமையாக இருந்து நிதானமாக செயல்பட்டு சரியான முடிவு எடுக்கிறவராக இருக்க வேண்டும்.

ஔ) சண்டை பண்ணுகிறவராக இருக்க கூடாது. எந்த காரியத்திற்காகவும் அது உபதேசமாக இருந்தாலும் சரி, சபைக்கடுத்தகாரியமாக இருந்தாலும் சரி, தன் குடும்ப காரியமாக இருந்தாலும் சரி பிறருடன் சண்டையிடுகிறவனாக இருக்ககூடாது. அவற்றை பொறுமையோடு சகிக்கிறவனாக இருக்கவேண்டும். அதாவது தீமைக்கு தீமை செய்கிறவனாக இருக்ககூடாது.

ஃ) பண ஆசையில்லாதவனாக இருக்கவேண்டும். உலகத்திலேயே நாம் ஒன்றும் கொண்டுவந்ததுமில்லை. இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோவதும் இல்லை. உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்கிற மன்பான்மையுடையவராக இருக்கவேண்டும். போதுமென்கிற மனதுடனே கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம். விசுவாசிகளை ஏமாற்றி ஏமாற்றி தனக்கு வீடுகளையும், ஆலயக் கட்டிடங்களையும் கட்டி அனைத்தையும் தன் உடமையாக்கிறவனாக இருக்ககூடாது.

க) தன் சொந்த குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனாக இருக்கவேண்டும். தன் பிள்ளைகளை சகல நல்லொழுக்கமுள்ளவர்களும், கீழ்ப்படிய பண்ணுகிறவர்களுமாயிருக்கவேண்டும். பாருங்கள், ஒருவன் தன் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான். இதனால் தான் இக்காலத்துக்குரிய செய்தி நீ ஒரு சபைக்கு செல்லும்போது, அந்த சபையின் மேய்ப்பனையும், அவன் தன் குடும்பத்தை நடத்தும் முறையையும், நன்கு கவனித்து பின் அவனுடைய சபைக்கு சென்று ஐக்கியப்படு, மற்றப்படி அவனுடைய சபைக்கு செல்லாதே என்று எச்சரிக்கிறது. சில மேய்ப்பர்களுடைய மனைவி இக்காலத்துக்குரிய செய்தியில் இல்லை. சிலருடைய பிள்ளைகள் இக்காலத்துக்குரிய செய்தியில் இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒருவன் தன்னை மேய்ப்பன் என்று அழைத்துக்கொண்டால் அவனுடன் ஐக்கியம் கொள்ளாதிருங்கள்.

101. It is the Pastor's business to preach , see not to lead songs. COD Vol.II/ page 913, Q & A 235, para 187.

அ) சபையில் பாஸ்டர் மந்தைக்கு ஆவிக்குரிய ஆகாரம் கொடுப்பதை விட்டுவிட்டு வேறு எந்த காரியங்களிலும் தலையிட்டு கொள்ளக்கூடாது. உதாரணமாக சபைக்கு வரும் தசமபாகம், காணிக்கை இவைகளில் தலையிடவே கூடாது. இவைகளை பொக்கிஷதார் பெற்று, பாஸ்டருக்கு கொடுக்கவேண்டிய விகிதப்படி பிரித்து கொடுக்கவேண்டும். ஆனால் இன்று பாஸ்டர்கள் பணத்துக்காக, கூலிக்காக மாரடிக்கிறதினால் பணத்தில் எப்பொழுதும் கண்ணோட்டமாகவே இருக்கிறார்கள். பொதுவாக நம்முடைய சபைகளில் பிரிவினை வருகிறதற்கு பணமே முக்கிய காரணமாயிருக்கிறது. அதை பங்கு போடுவதில் பிரச்சனைகள். இதனால் பிளவு. இந்நாட்களில் இதை சமாளிக்க சில பாஸ்டர்கள் என்ன செய்கிறார்கள் என்றால்: சபையில் பிரபலமான ஒரு சிலரை தங்கள் கைகளுக்குள் போட்டுக்கொள்ளுகிறார்கள். அவர்களுக்கு அடிக்கடி பணஉதவி மற்றும் இதர உதவிகள் செய்து கொண்டே அவர்களை தங்கள் கரங்களுக்குள் போட்டுக்கொண்டே, எதிர்பவர்களுடைய வாயை அடைத்துவிடுகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு பெரிய அரசியல் நாடகம் இந்நாட்களில் நமது சபைகளில் காணப்படுவது மிக வெட்கக்கேடாகும். பணத்தை தங்கள் கரங்களுக்குள் வைத்துக்கொண்டு, பல பதவிகளை விசுவாசிகளுக்கு கொடுத்து அவர்களையும் தங்கள் கரங்களுக்குள் போட்டுக்கொள்கிறார்கள். பிரியமானவர்களே சபையில் பாடல்கள் பாடுவது கூட விசுவாசிகளுடைய பணிதான். அது ஒரு பாஸ்டருடைய பணி அல்ல. பாஸ்டருடைய பணி ஆவிக்குரிய செய்தி, ஆகாரம் மந்தைக்கு கொடுப்பது. இதை தவிர இதர பணிகளை ஒரு பாஸ்டர் தன் ஆதிக்கத்திற்குள் கொண்டுவரக்கூடாது.

ஆ) Pastor has a single ministry COD Vol.II, Page 879, Q & A 221, Para 36.

பாஸ்டர் சுவிசேஷ ஊழியம் செய்ய கூடவே கூடாது. அது அவருடைய பணி அல்ல. மேலும் அது அவருடைய அழைப்பை விட ஒரு உயர்ந்த அழைப்புக்குரியவருடைய பணி. ஆனால் நீங்கள் பொதுவாக நமது சபைகளில் பார்ப்பீர்களானால் பாஸ்டர் ஊர் பல சுற்றித்திரிந்து கொண்டு ஊழியம் செய்து வருகிறார்கள். இதிலிருந்து இவர்கள் அழைக்கப்பட்டவர்கள் அல்ல என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளலாம். ஒரு பாஸ்டரது ஊழியம் ஒரு மந்தைக்குட்பட்டது மட்டுமே.

இ) The pastor should at all prayer meetings and soforth, where congregate or gatherings are. (Church order – supplementary preached in Oct.1958, para 48)

ஆம் பிரியமானவர்களே, பாஸ்டர் தனது சபையில் அனைத்து கூட்டங்களிலும் பங்கு கொள்ளவேண்டும். அதை மூப்பர்களிடம், டீக்கன்களிடம் ஒப்படைத்துவிட்டு அவர் ஊர் சுற்றக்கூடாது. ஒரு மேய்ப்பனுக்கு ஒரு மந்தை மட்டுமே. அதிலே அவர் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும். ஒரு மேய்ப்பனுக்கு பல மந்தைகள் கிடையாது. ஒருவனுக்கு ஒரு குடும்பம். பல குடும்பங்களை கொண்டவன் யார்? அதே நிலைதான் பல மந்தைகளை கொண்ட ஒரு பாஸ்டரது நிலையும்.

ஈ) உங்களுக்கு தேவனால் ஏற்படுத்தப்பட்ட, பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கப்பட்ட ஒரு போதகர் இருப்பாராகில், அவரை நீங்கள் உங்கள் விரல் நுனியினால் கட்டுப்படுத்திவைக்க நினைத்தால், அப்போதகர் வேத விரோதமான காரியத்தோடு ஒத்துப்போகமாட்டார். அவர் உங்கள் சபையை விட்டு வெளியேறிவிடுவார்.

போதகர் சத்தியத்தை உண்மையாய் உரைப்பவராக இருக்கவேண்டும். (எபேசு சபைக்காலம், பத்தி 143) நம் மத்தியில் பாஸ்டர் தவறு செய்ய அதை விசுவாசிகள் சுட்டிக்காட்டினால், நான் சொல்லுவதை கேட்டு சபையில் இருக்க சம்மதமானால் இரு, இல்லாவிட்டால் சபைக்கு வராதே. நீ என்ன சொல்லுகிறது? நான் என்ன கேட்கிறது? என்கிறார்கள். ஏனென்றால் சபை கட்டிடத்தை தன் பெயரில் தக்க வைத்துக்கொண்டார் அல்லவா? அவரை நீங்கள் நீக்க முடியாது அவர் தான் உங்களை வெளியே தள்ளும் நிலையில் இன்றைய சபை நிலையுள்ளது.

உ) பாஸ்டருக்கு சபையில் மதிப்பு இல்லையென்றால் அந்த சபை அவ்வளவு தான், முடிந்தது. If a church ever loses respect for it's pastor, that church is gone. ஒரு விசுவாசி பிரசங்கப்பீடத்தில் நின்று கொண்டு பாஸ்டரை பெயர் சொல்லி அழைத்து, அதுவும் ஒரு முறையல்ல பல முறைகள் அவ்வண்ணமாக செய்து, சாட்சி கொடுப்பாராகில் அது சபை ஆகாது. இயேசு கிறிஸ்துவின் ஜெபவீடே உன்னை சீர்தூக்கிப்பார்.

ஊ) சபையின் முழுப்பொறுப்பு பாஸ்டர் தான். அவருக்கு அனைவரும் கீழ்ப்படியவேண்டும். ஆனால் அவர் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிறவராக இருக்கவேண்டும்.

எ) உங்கள் பாஸ்டர் சத்தியத்தை நன்கு அறிந்திருக்கிறார், போதிக்கிறார் என கூறலாம். சாத்தானும் சத்தியத்தை நன்கு அறிந்தவனே. யாக்.2:19. லூக். 4:9-12. ஆதி.3வது அதி. ஆதலால் ஒரு பாஸ்டர் சத்தியத்தை நன்கு அறிந்திருப்பது மட்டும் அவரை அவருடைய ஸ்தானத்துக்கு தகுதிப்படுத்தாது. அவரிடம் கிரியைகள் காணப்படவேண்டும். கிரியைகள் இல்லாத விசுவாசம் செத்தது.

ஏ) உன் ஆடுகள் நிலைமையை நன்றாக அறிந்து கொள். உன் மந்தை மீது கவனமாக இரு. நீதி.27:23. ஆனால் இந்நாட்களில், நமது சபைகளில் பாஸ்டர்கள் தசமபாகம் காணிக்கை மீதே கவனமாக இருக்கிறார்கள். ஆடுகள் நிலைமை பற்றி, மந்தையை பற்றி கவலை இல்லை.

ஐ) தன் ஸ்தானத்தை விட்டுவிட்டு அனைத்து ஊழியத்திலும் தலையிடும் ஒரு பாஸ்டர், தன் கூட்டை விட்டு அலைகிற குருவி எப்படியிருக்கிறதோ அப்படியே இருக்கிறார். நீதி 27:8.

ஒ) சபையின் முழு ஆவிக்குரிய காரியங்களின் கண்காணிப்பு பாஸ்டருக்குரியதாகும். The Pastor is over the supervising of the spiritual part. Q & A 221, para 16.

ஓ) பாஸ்டர் ஒரு மேய்ப்பன். ஆடுகளை கண்காணிக்கிறார், பராமரிக்கிறார், வழிநடத்துகிறார்,மேற்பார்வையிடுகிறார், போஷிக்கிறார். அவருடைய பிறப்பே ஒரு மேய்ப்பனாயிருக்குமானால், அவர் தன் வழிகள் முழுவதும் மந்தையை மேய்க்கிறவனாகவே இருப்பார். கொஞ்ச நாள் விசுவாசி, பின் கொஞ்ச நாள் டீக்கன், பின் கொஞ்ச நாள் மூப்பர், பின் கொஞ்ச நாள் சுவிசேஷகர், பின் கொஞ்ச நாள் மேய்ப்பர், இப்படியாக அவருடைய அழைப்பு மாறிமாறிக்கொண்டேயிருக்காது. அவர் மேய்ப்பனாகவே தெரிந்துக்கொள்ளப்பட்டவர். அதுவும் அவர் தாயின் கர்ப்பத்திலிருந்தே. உலகத்தோற்றத்துக்கு முன் அவர் கிறிஸ்துவின் சிந்தையில் ஒரு மேய்ப்பனாகவே இருந்தார். அவருடைய இரத்தமே மேய்க்கும் ஊழியம்தான். அவர் அதற்கென்று முன் அறிந்து, முன் குறிக்கப்பட்டு, பிரதான மேய்ப்பனால் அழைக்கப்பட்டவர்.

ஔ) ஒரு மேய்ப்பன் தேவனால் அழைக்கப்பட்டவனாக, ஏற்படுத்தப்பட்டவனாக இருப்பாராகில் அவரை அந்த பதவியிலிருந்து யாரும் நீக்க, எடுக்க முடியாது. ஏனென்றால் அவர் தேவனால் ஏற்படுத்தப்பட்டவர். அவர் மனுஷர்களால் ஏற்படுத்தப்படவில்லை. அவர் தேவனால் நியமிக்கப்பட்டப்படியினால் சிலருக்கு, பெரும்பான்மையினருக்கு அவரோடு ஒருமித்து போக மனமில்லையென்றாலும் அவரை சபையிலிருந்து நீக்க முடியாது. ஏனென்றால் அவர் ஒரு சபையாரால் நியமிக்கப்படவில்லை. மாறாக தேவனால் நியமிக்கப்பட்டவர். ஆதலால் அவரோடு ஒருமித்து போகாதவர்கள் அவரை விட்டு விலகவேண்டுமேயன்றி அவர் விலகவேண்டிய தேவையில்லை.

102. உங்கள் மேய்ப்பன் இப்படிப்பட்டவராக இல்லையென்றால் அவர் ஒரு கள்ளகபடமுள்ள வேலையாள்.

அ) தாவீது சவுலைப் பார்த்து உம்முடைய அடியான் என் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துகொண்டிருக்கிறபோது, ஒரு விசை ஒரு சிங்கமும் ஒரு விசை ஒரு கரடியும் வந்து, மந்தையிலிருக்கிற ஆட்டை பிடித்துக்கொண்டது. நான் அதை தொடர்ந்து போய், அதை அடித்து, அதை அதன் வாய்களுக்கு தப்புவித்தேன். அது என்மேல் பாய்ந்த போது நான் அதன் தாடியை பிடித்து அதை அடித்து கொன்று போட்டேன். 1சாமு.17:34-35. உங்கள் மேய்ப்பனுக்கு மந்தையின் மேல் உள்ள ஒவ்வொரு ஆட்டின் மேலும் இந்த பொறுப்புணர்ச்சி உண்டா? மந்தையிலுள்ள ஒவ்வொரு ஆட்டையும் பாதுகாக்க துணிவு உண்டா? நல்ல கறவை ஆடுகள் (தசமபாகம், காணிக்கை அதிகம் கொடுப்பவர்கள்) பின் தானா மேய்ப்பன் நோட்டம் அதிகம். ஏழை எளியவர்களை அதிகம் கண்டுக்கொள்வதில்லையே.

ஆ) ஒரு மனுஷன் நூறு ஆடுகளையுடையவனாயிருந்தான். ஒன்று காணாமல் போனது. அவன் காணாமல் போன ஆட்டை கண்டுபிடிக்குமளவும் சுற்றித்திரிந்து காணாமல் போன தன் ஆட்டை கண்டுபிடித்தான். அவன் 99 ஆட்டையும் விட்டுவிட்டு ஒன்று மட்டும் தேடி கண்டுபிடிக்கும் வரை தூங்கமாட்டான். (மத்.18:12) தியானியுங்கள் லூக்.15:4-6. உங்கள் மேய்ப்பன் உங்களுக்காக இவ்வாறு கவலை கொள்ளுகிறாரா?

இ) உங்கள் மேய்ப்பன் தன் மந்தையில் பலவீனமானவைகளை பலப்படுத்துகிறாரா? நசல் கொண்டவைகளை குணமாக்குகிறாரா? எலும்பு முறிந்தவர்களை காயம் கட்டுகிறாரா? துரத்துண்டவர்களை திரும்ப கொண்டுவருகிறாரா? எசே.34:4 ஆட்டுக்குட்டிகளை தனது புயத்தினால் சேர்த்து தனது மடியிலே சுமந்து கறவையாடுகளை மெதுவாய் நடத்துகிறாரா? ஏசா.40:11 இது மேய்ப்பனுடைய அன்பை,பொறுமையை மந்தைமீது காட்டுகிறது.

ஈ) உங்கள் மேய்ப்பன் தன் மந்தையிலுள்ள ஒவ்வொரு ஆடுகளின் நிலைமையை நன்கு அறிந்தவராக இருக்கிறாரா? மந்தையின் மேல் எப்பொழுதும் கவனம் கொண்டிருக்கிறாரா? நீதி.27:23 நிச்சயமாக இல்லையென்று என்னால் கூறமுடியும். நீங்கள் என்ன கூறுகிறீர்கள்.?

உ) உங்கள் மேய்ப்பனிடம் சுயநலமா? அல்லது பொதுநலமா? அவலட்சனமான ஆதாயத்திற்காக, தசமபாகம்,மற்றும் காணிக்கையாக மேய்ப்பன் பணி செய்கிறாரா? சுதந்தரத்தை இருமாப்பாய் ஆளுகை செய்கிறாரா? 1பேதுரு.5:3. இன்று வளசரவாக்கம் பாஸ்டர் சாமுவேல், சென்னை சபை பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் போன்றவர்கள் சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகை செய்கிறார்கள். தங்கள் சுய கருத்துக்களை உபதேசங்களாக மக்கள் மீது திணிக்கிறார்கள். மந்தையை அடிமைப்படுத்துகிறார்கள். இவர்கள் ஊழியம் செய்ய வரவில்லை. ஏனென்றால் சபையில் தங்களை உயர்த்தி கொள்கிறார்கள். விசுவாசிகளை சகோதரர்களாக நடத்த முடியவில்லை, அடிமைகளாகவே நடத்துகிறார்கள். விசுவாசிகள் இவர்கள் முன் கைகட்டி நிற்கிறார்கள். சமமாக உட்கார்ந்து பேசமுடியவில்லை. இது என்ன கொடுமை?

ஊ) விசுவாசிகளுக்கு போதகனாக இல்லாமல் தகப்பனாக இருக்கவேண்டும். 1கொரி.4:15.

எ) ஆடுகளுக்காக தன் ஜீவனை கொடுக்கவும் ஆயத்தமாக இருக்கவேண்டும். யோ.10:11.

103. இவர்கள் மந்தைக்கு மாதிரி அல்ல. பாருங்கள் பாஸ்டர் ஊர் சுற்றிக்கொண்டே இருக்கிறார். இது ஒரு மேய்ப்பனின் பணி அல்ல. பாஸ்டர் மனைவி பொது இடங்களில் வேலை செய்கிறார்கள். இது தேவனுடைய வார்த்தைக்கும் இக்காலத்துக்குரிய செய்திக்கும் மாறான செயல். தன் மகள் பள்ளிக்கு செல்லும்போது சுடிதார் ஆடைகள் அணியலாம். மற்றொருவருடைய மகள் சபைக்கு சுடிதார் ஆடைகள் அணிந்து வரக்கூடாது. எல்லாம் சுய நலம். பாருங்கள், இவர்கள் மந்தைக்கு மாதிரி அல்ல.

104 இந்த பண்புகள் உங்கள் மேய்ப்பனிடம் இல்லையென்றால் அவர் கள்ளகபடமுள்ள வேலையாளே. நான் கேட்கிறேன் இந்த பண்புகள் உள்ள ஒரு மேய்ப்பனை நீங்கள் எனக்கு காட்டமுடியுமா? உபாத்தியாயர்களுக்கு குறைவில்லை. ஆனால் தகப்பன்மாார்களை கண்டுப்பிடிப்பது அரிதாயிருக்கிறது. ஆதலால் பிரியமானவர்களே நீங்கள் எந்த சபைக்கு சென்றாலும், உங்கள் சபையின் போதகர் தேவனுடைய மனுஷன் என்று நீங்கள் நம்புகிறீர்களா, விசுவாசிக்கிறீர்களா? இல்லையெனில். நீங்கள் அதை விட்டு விலகி, ஒரு தேவ மனிதனிடம் செல்லுங்கள். அவரை நீங்கள் விசுவாசிப்பீர்களானால் அவர் உங்களுக்கு சத்தியத்தை எடுத்துரைப்பார் என்று விசுவாசித்து, அவரை ஏற்றுக்கொள்ளுங்கள். நீங்கள் கிறிஸ்துவில் கொண்டிருக்கும் உங்கள் சொந்த தனிப்பட்ட விசுவாசமே உங்களை இரட்சிக்கிறது. (நான் மோசேயோடு இருந்தது போல உன்னோடும் இருப்பேன், பத்தி 228, நாள் 11.9.1960).

105 ஒரு சபையை தெரிந்து கொள்ளும் விஷயத்தில், நீங்கள் ஐக்கியம் கொள்ள விரும்பும் சபையை குறித்து நன்றாக ஜெபம் செய்ய வேண்டும். சபைக்கு ஆவிகள் உண்டு என்பதை ஞாபகம் கொள்ளுங்கள். நான் குற்றம் கண்டுபிடிக்க வரவில்லை... நீங்கள் ஒரு சபைக்கு சென்று அதன் நடத்தையை கவனிப்பீர்களானால் - அந்த போதகரை சற்று கவனியுங்கள். வழக்கமாக போதகர் எப்படி நடந்துகொள்ளுகிறாரோ, அப்படியே சபையும் நடந்துகொள்ளும். நாம் பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்ளுவதற்கு பதிலாக ஒருவர் ஆவியை மற்றவர் பெற்றுகொள்ளுகிறோமா என்று நான் சில சமயங்களில் வியந்ததுண்டு..எனவே சபையை தெரிந்து கொள்ளும் விஷயத்தில் நான் உண்மையான, அடிப்படை தத்துவம் கொண்ட முழு சுவிசேஷ வேதாகம சபையையே தெரிந்து கொள்ளுவேன். ..என் குடும்பத்தை சேர்க்க ஒரு சபையை நான் தெரிந்து கொள்ள வேண்டுமானால்.. (மணவாட்டியை தெரிந்து கொள்ளுதல், பக்கம் 15, கடைசி பத்தி, பக்கம் 16, முதல் பத்தி)
ஆம் கிறிஸ்துவுக்குள் எனக்கு பிரியமானவர்களே, இன்று உங்கள் மத்தியிலுள்ள கல்வாரி சபை, சென்னை சபை, இயேசு கிறிஸ்துவின் ஜெபவீடு போன்ற சபைகளை குறித்து நான் ஆவியில் நிதானித்தது என்னவென்றால் அவைகள் பரிசுத்த ஆவியை பெற்று கொண்டதற்கு பதிலாக ஒருவரின் (பாஸ்டரின்) ஆவியை பெற்றுள்ளதாகவே காண்கிறேன். பரிசுத்த ஆவிக்கு சபையில் இடமில்லை. மாறாக பாஸ்டர்களின் ஆவிக்கு மட்டுமே இந்நாட்களில் சபைகளில் இடமுள்ளதாக காண்கிறேன்.

106. ஒரு உதவிக்காரன், டீக்கன் விவாகமான மனிதனாக இருக்கவேண்டும், அவன் ஒரே மனைவியையுடைய புருஷனாக இருக்கவேண்டும். மேலும் அவருடைய மனைவி, கணவனுடன் ஒரே விசுவாசத்துக்குள் இருப்பவளாக இருக்கவேண்டும். அவருடைய மனைவி தன் கணவனுடன் சத்தியத்திற்குள் இல்லை, விசுவாசத்தில் இல்லை யென்றால் அந்த மனுஷனை உதவிக்காரர், டீக்கன் பதவிகளுக்கு தகுதியற்றவராகச் செய்கிறது. அவர் தன் முழு குடும்பத்தையும் கீழ்ப்படியப்பண்ணுகிறவராக இருக்கவேண்டும். மனவை மக்களும் அவரோடு கூட விசுவாசத்தில் இருக்கவேண்டும். இல்லையென்றால் அது ஒரு முரண்பாடாக இருக்கும். சென்னை சூளைமேடு சபையில் எல்லாமே முரண்பாடு தானே. அங்கு திருமணம் ஆகாத கண்காணி/பாஸ்டர், திருமணமாகாத மூப்பர், திருமணமாகாத உதவிக்காரர். எல்லாமே தலைகீழ். நான் எழுதிய செய்தித்தொகுப்புகளினால் குத்தப்பட்டு திருமணம் உடன் செய்துகொண்டதாக ஒரு நாள் பாஸ்டர் ஜான் ஐசக் சாட்சி கூறினார். இன்று அந்த சாட்சியில் மாற்றம் இருக்கலாம். அதை தேவன் அறிவார். பின் அது எப்படி தேவனுடைய சபையாக இருக்க முடியும்? பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்படுகிற சபையாக இருக்க முடியும்?

107. அவர் சபைக்கு வரங்களை அனுப்பினார். அப்போஸ்தலர்களை. அப்போஸ்தலர் யார்? மிஷனரி. மிஷனரி என்றால் அனுப்பப்பட்ட ஒருவன் என்று பொருள். தீர்க்கதரிசி என்றால் ஞானதிருஷ்டிக்காரன். மேய்ப்பன், போதகன், சுவிசேஷகன் இவர்கள் அனைவருமே தேவனுடைய வார்த்தையை நிதானமாய் பகுத்து அதை மற்றவர்களிடம் கொண்டுவருகின்றனர். பின் ஆவியின் வரங்கள் சபையில் கிரியை செய்து வார்த்தையை உறுதிப்படுத்தி இயேசு கிறிஸ்து சபையில் ஜீவிக்கிறார் என்பதை காண்பிக்கின்றன. (விடாமுயற்சி, பத்தி 244, நாள் 18.2.1962)
பிரியமானவர்களே இங்கு செய்தியை நன்கு கவனித்தீர்களானால் சபையின் பக்திவிருத்திக்கு பாஸ்டர் வரம் மட்டும் போதாது, ஐந்து வகை வரமும், ஊழியமும் தேவைப்படுகிறது. ஆதலால் தான், தான் மட்டும் இக்காலத்துக்குரிய செய்தி மட்டும் எனக்கூறி உங்களை மோசம்போக்கும் கள்ளகபடமுள்ள ஆட்களை குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என மீண்டும் மீண்டும் உங்களுக்கு எடுத்து கூறுவது எனக்கு கிறிஸ்துவுக்குள் நலமாயிருக்குமென நம்புகிறேன். இது மிகவும் கொடிதான ஒரு வஞ்சிப்பின் காலம்.

108. முடிவாக:
அ) கிறிஸ்துவுக்குள் எனக்கு பிரியமானவர்களே நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் காலம் கொடிய வஞ்சிப்பின் காலம். புத்தியுள்ள, புத்தியில்லாத கன்னிகைகள் மணவாளனுக்கு எதிர்க்கொண்டுப்போக தங்களை ஆயத்தப்படுத்தும் காலம். புத்தியில்லாதவள் தான் யார் என்பதை அறியாது தன்னை புத்தியுள்ளவளாக கற்பனை செய்து கொண்டு, புத்தியில்லாத நிலையிலிருந்து தன்னை தானே மணவாளனை சந்திக்க ஆயத்தப்படுத்தும் காலம். இது தான் வஞ்சிப்பு. அப்படிப்பட்ட காலத்தில்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.
ஆ) நமது லோக்கல் சபைகளில் மூவகை விசுவாசிகள் உண்டு. விசுவாசிகள், அவிசுவாசிகள், பாவனை விசுவாசிகள். இந்த மூவகைவிசுவாசிகளும் தங்களை தாங்களே மணவாட்டி என அழைத்து கொள்ளுகிறார்கள். இது தான் வஞ்சிப்பு. இப்படிப்பட்ட வஞ்சிப்பின் காலத்தில்தான் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இப்பொழுது இந்த மூவகை விசுவாசிகளில் நீங்கள் யார் என்பதை உங்களை நீங்களே சீர்தூக்கிப்பாருங்கள். நீங்கள் உண்மையான விசுவாசிதானா என்பதை நீங்களே பரிசோதித்துப் பாருங்கள். பாஸ்டர் நீங்கள் யாவருமே மணவாட்டி, மணவாட்டி என்றே கூறிக்கொண்டு தனக்கு சொத்து சுகங்களை உங்களைக்கொண்டு

சேர்த்துகொள்வார். நீங்கள் உங்கள் பொருளையும் இழந்து போவீர்கள், அதோடு மட்டுமல்ல உங்கள் ஆத்துமாவையும் இழந்து போவீர்கள் என உங்களை எச்சரிக்க விரும்புகிறேன்.
இ) இது கொடிய வஞ்சிப்பின் காலமாதலால் கள்ளகபடமுள்ள வேலையாட்கள் நிறைந்த காலம். பெரோயா பட்டினத்தாரைப் போன்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள். அப்.17:11 எபேசு சபையினரின் போன்று அப்போஸ்தலரல்லாதவர்கள் தாங்கள் அப்போஸ்தலர் என்று சொல்லுகிறதை சோதித்து அவர்கள் பொய்யர்கள் என்று கண்டறிந்தது போல நீங்களும் உங்கள் பாஸ்டர்களை சோதித்தறிந்து அவர்கள் உங்களை நித்திய ஜீவனுக்கு வழிநடத்துவார்களா, அவர் செம்மறியாடுகளை மேய்க்கிறவரா அல்லது வெள்ளாடுகளை மேய்க்கிறவரா என்று கண்டறிந்து; உங்களை நித்திய ஜீவனுக்கு வழிநடத்துகிற, செம்மறி ஆடுகளை மேய்க்கிற மேய்ப்பனை பற்றிக்கொள்ளுங்கள்.

109. இந்தச் செய்தித் தொகுப்பை எழுதி முடித்து வெளியிட ஆயத்தமாயிருக்கும் வேளையில் ஒரு புது உபதேசம் பொழிச்சலூரிலிருந்து பாஸ்டர் டேனியேல் ராஜ் கொண்டு வந்துள்ளதாக அறியவந்தேன். அதாவது அன்று பழைய ஏற்பாடு - நிழல். புதிய ஏற்பாடு - நிஜம். இது உண்மை தான். ஆனால் இத்துடன் சாத்தான் தன் போதனையை எப்படி சபைக்குள் கொண்டு வருகிறான் என்பதை பாருங்கள். இப்பொழுது பைபிள் - நிழல். தீர்க்கதரிசியின் செய்தி - நிஜம். பிரியமானவர்களே, இது கேட்டின் மகனுடைய தந்திரமான போதனை. இப்படிப்பட்ட போதனைகளில் சிக்கிக் கொள்ளாதீர்கள். சாத்தான் செய்தி, செய்தி என்று கூறிக்கொண்டு தன்னுடைய ஊழியர்களின் அதாவது வெள்ளாடுகளின் மேய்ப்பன் மூலம் தேவனுடைய வார்த்தையிலிருந்து உங்களை வேறுபிரித்து விடுகிறான் என்பதை நீங்கள் இன்னும் அறியாதிருக்கிறதென்ன?

110. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை இரக்கம் சந்தோஷம் சமாதானம் அவருடைய வருகை பரியந்தம் உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.

டிசம்பர், 2004 - ஜனவரி 2005

கிறிஸ்துவின் அன்பில்,
சகோ. காலேப் யோசுவா

## ஒரு முக்கிய அறிவிப்பு

பிரியமானவர்களே, இக்காலத்துக்குரிய செய்தியில் தவறான உபதேசத்தில் இருக்கிறார்கள் என்று தேவனுடைய ஆவியினால் உணர்த்தப்பட்டவர்களை குறித்து பலமுறை என்னுடைய செய்தித்தொகுப்புகளில் எழுதிவிட்டேன். என் கடமையை நான் செய்து முடித்தேன் என்ற மனத்திருப்தி என் உள்ளத்தில் உண்டானதினால் இனி அவர்களை பற்றிய பழைய காரியங்களை என் செய்தித்தொகுப்புகளில் இனி எழுதப்போவது கிடையாது. உதாரணமாக பாஸ்டர் ஜான் ஐசக் ஒரு விசுவாசியை அவிசுவாசியுடன் திருமணத்தில் இணைத்து வைத்தார். இது தவறு எனத் தெரிந்தும், மனுஷர்களை பிரியப்படுத்த இதைச் செய்தார். ஆதலால் இதை கடிந்து பல முறை எழுதினேன். இனி அந்த காரியம் குறித்து எழுதுவதில்லை. பாஸ்டர் காபிரியேல் பக்தசிங் இரு எஜமான்களுக்கு ஊழியம் செய்கிறார். ஆதலால் அவருடைய ஊழியம் தேவனால் ஏற்படுத்தப்பட்டது இல்லையென பலமுறை எழுதினேன். இனி அது குறித்து மேலும் எழுதப்போவதில்லை. ஆனால் வேற்றுமையான புதிய உபதேசங்கள் சபையில் காணப்படுமானால் அது குறித்து எழுதுவேன். மக்களை எச்சரிப்பேன்.

## புது வருட நல்வாழ்த்துக்கள் - 2005

*கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்களுக்கு நானும் என் வீட்டாரும் புதிய ஆண்டு 2005-க்கான நல்வாழ்த்துக்களை கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நாமத்தினால் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.*

*கடந்த ஆண்டு 2004 முழுவதும் பகற்காலங்களிலே கர்த்தர் தமது கிருபையை கட்டளையிட்டார். இராக்காலத்திலே அவரை பாடும் பாட்டு நம் வாயிலிருந்தது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.*

*இந்த புதிய ஆண்டிலும் 2005, கர்த்தர் தம்முடைய ஜனங்களின், தம்முடைய ஊழியக்காரர்களின் சுகத்தை விரும்புகிற தேவனாயிருக்கிறார். அவருக்கு துதி கனம் மகிமை என்றென்றைக்கும் உண்டாவதாக. ஆமென்.*

*கிறிஸ்துவின் அன்பில்*
*சகோ. காலேப் யோசுவா*